அனைத்து வணிகவியல் ஆசிரிய பெருமக்களுக்கும் வணக்கம்

நமது வணிகவியல் ஆசிரிய பெருமக்களுக்காக நம் மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்ட வணிகவியல் ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் **எந்தவித இலாப நோக்கமில்லாமல் 11 ஆம் வகுப்பு வணிகவியல் (தமிழ் வழி) Notes of Lesson தயாரிக்கப்பட்டுள்ளது**

அரசு நம்மிடம் எதிர்பார்க்கும் அனைத்து தலைப்புகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது

இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வணிகவியல் ஆசிரியர்களுக்கும் நன்றி

மேலும் இதனை தயாரித்தவர்கள் அவர்களின் பள்ளி மற்றும் மாவட்ட சூழலுக்கு ஏற்றவாறு தயாரித்துள்ளனர். இதனை உங்கள் பள்ளிக்கு ஏற்றவாறு நீங்கள் மாற்றி எழுதிக்கொள்ளவும்

இதனை தயாரித்தவர்கள் அவர்களின் விடுமுறை நாட்களில் நமக்காக தயாரித்துள்ளனர்.

இதில் ஏதேனும் குறையோ அல்லது மாற்றமோ கூற நினைத்தால் சம்மந்தப்பட்ட ஆசிரியர்க்கோ அல்லது எனக்கோ நீங்கள் (**தயாரித்தவர் மனம் புண்படாதவகையில்**) தகவல் தெரிவிக்கலாம்

மீண்டும் ஒரு முறை இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வணிகவியல் ஆசிரியர்களும் நன்றி

இவண்...
தொகுப்பாளர்
M. முத்துச்செல்வம்
MLWA HSS
மதுரை
9842104826

Downloaded From www.nagaicollege.com

11 ஆம் வகுப்பு வணிகவியல் (TM)

Notes of Lesson தயாரித்துள்ள ஆசிரிய பெருமக்களின் பெயர் விவரம்

பாடம்	ஆசிரியர் பெயர்	பணி புரியும் பள்ளி	மொபைல் எண்
L 1	ஜெ. பன்னீர்,	முதுகலை ஆசிரியர் அரசு மே. நி. பள்ளி, ஆற்பாக்கம்-631603. காஞ்சிபுரம் (மா)	9047885101.
L 2	பே.கார்த்திக்	K.G.S Matric HSS, திருப்பூர்.	76394 64966
L 3	J S SAYEE LAKSHMI	GGHSS SHOLAVANDAN, MADURAI.	94867 30743
L 4	DR M.BALA SHUNMUGANANTHAM	SOURASHTRA (B) HSS MADURAI	6380848 005
L 5	P.KARTHIKEYAN	S.U.M.HR.SEC. SCHOOL, ROYAPPANPATTY, THENI-DT.	9943065966.
L 6	S.M.RAJENDRAN ,	GHSS THANGAMMALPURAM. THENI DISTRICT	:9042117151
L 7	M.Thamarai Nangai,	P.G.Asst. Thiyagi Valliyammai Govt.HSS Thillaiyadi, MAYILADUTHURAI Dt.	97888 13983
L 8	M GANAPATHI	PG ASST S V GHSS SAMATHUR Pollachi	99426 03638
L 9	Nagarani	PG.ASST. GGHSS,PERAIYUR Boys	94865 07757
L 10	Anusuya	Melakottai Madurai (Dist)	99429 52873
L 11	Anusuya	Melakottai Madurai (Dist)	99429 52873
L 12	Anusuya	Melakottai Madurai (Dist)	99429 52873
L 13	Stephen A	GHSS THIRUVEGAMPET SIVAGANGAI	9788541001
L 14	K.SUBHASHINI	GGHSS SHOLAVANDAN	98946 00847
L 15	Anusuya	Melakottai Madurai (Dist)	99429 52873
L 16	M GAYATHRI	GGHSS Tirumangalam	99425 19029
L 17	Pothumponnu	PG.ASST. GHSS, M.Subbulapuram.	90957 39136
L 18	Srividya	GHSS Kondayapatti Madurai (Dist)	98437 78822
L 19	Arun	GHSS Vellaiyampatti Madurai (Dist)	90033 47170
L 20	Arun	GHSS Vellaiyampatti Madurai (Dist)	90033 47170
L 21	P USHARANI	GGHSS RAJA STREET COIMBATORE	98430 09693
L 22	P USHARANI	GGHSS RAJA STREET COIMBATORE	98430 09693
L 23	R.Narendhira Kumar,	P.G.Asst P.A.Vidya Bhavan Hr. sec. School, Karur.	97153 83953
L 24	R.Narendhira Kumar,	P.G.Asst P.A.Vidya Bhavan Hr. sec. School, Karur.	97153 83953
L 25	Mythra N ,	Municipal HSS Lakshmipuram Kolathur chennai 99	99405 19850
L 26	V. JANAKI	MPL girls higher secondary school Pettai Tirunelveli	74023 58561
L 27	P.MANJULA	காமராசர் மாநகராட்சி மே.நி.பள்ளி பேட்டை திருநெல்வேலி	89035 92497
L 28	R Chellapandi	NADAR SARASWATHI HSS Usilampatti	99446 66978
L 29	Mythra N ,	Municipal HSS Lakshmipuram Kolathur chennai 99	99405 19850
L 30	V.NATARAJAN	PG.ASST GHSS PALAYANOOR .SIVAGANGAI(Dis)	96552 39087
L 31	V.NATARAJAN	PG.ASST GHSS PALAYANOOR .SIVAGANGAI(Dis)	96552 39087
L 32	P. Ramaraj,	Ghss Odaipatty, Dindigul district	98432 61749
L 33	P. Ramaraj,	Ghss Odaipatty, Dindigul district	98432 61749

Downloaded From www.nagaicollege.com

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு:1. இந்திய துணைக் கண்டத்தின் வணிக வரலாற்றுப் பின்னணி
தேதி : ஜூன் - 1 வது வாரம்

NAME : J. PANNEER,
G.H.S.S – ARPAKKAM 631 603,
KANCHIPURAM DISTRICT.
CELL : 9047885101.

கற்றல்நோக்கங்கள் :

1. இந்திய துணைக்கண்டத்தின் வணிகவரலாற்றுப் பின்னணியைப்பற்றி தெரிந்துகொள்ள இயலும்.
2. பண்டமாற்று வணிகமுறையை அறிந்து கொள்ள முடியும்.
3. வணிகம் மற்றும் தொழிலின் பல்வேறு தடைகளை புரிந்து கொள்ள முடியும் .

கற்றல்விளைவுகள் :

1. பணம் கண்டறியப்பட்ட பின்பு பண்டமாற்று முறை வழக்கொழிந்ததை புரிந்து கொண்டனர்.
2. பண்டமாற்று முறையில் இருந்து நாணய முறை, அஞ்சல் வழி வணிகம், வாடகை கொள்முதல்முறை, தவணை விற்பனை முறை மின்னணு வர்த்தகம் என உருமாறி வளர்ந்துள்ளதை அறிந்து கொண்டனர்.
3. வணிகத்தின் தடைகளையும் அவற்றை நீக்கும் வழி முறைகளையும் புரிந்து கொண்டனர்.

கற்றல்கற்பித்தல்உபகரணங்கள் :

PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

முன்னறிவு :

முதன்முதலில் சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் வியாபாரம் என்ற சொல்லை பயன்படுத்தியதை நினைவூட்டல் .புறநானூறு மற்றும் திருக்குறள் ஆகிய நூல்களில் வாணிகம் என்ற சொல் பரவலாக பயன்படுத்தப்பட்டதை விளக்குதல் .

பாடஅறிமுகம் :.

மூவேந்தர்களான சேர , சோழ மற்றும் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வியாபாரம் பண்டமாற்று முறையில் சிறப்பாக நடைபெற்றதை நினைவூட்டல் . பாண்டியர் ஆட்சியில் பொருட்கள் விற்குமிடம் அங்காடி எனவும் ,பகலில் வியாபாரம் நடக்குமிடம் நாளங்காடிஎனவும் , இரவில் வியாபாரம் நடக்குமிடம் அல்லங்காடி என்பதையும்அறிமுகம்செய்தல். மதுரை – தூங்காநகரமாக திகழ்ந்ததை (சிலப்பதிகாரம்) அறிமுகம்செய்தல். பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தகமையங்களை அறிமுகம் செய்தல். வியாபாரம் பற்றிய சாணக்கியரின் கருத்தையும் ,வடஇந்தியாவில் வணிகம் நடைபெற்ற விதத்தையும் விளக்குதல்.

பாடவளர்ச்சி / கற்றல்- கற்பித்தல்செயல்பாடு / ஆசிரியர்செயல்பாடு :

<u>பண்டமாற்றுமுறை :</u> ஒருபொருள்மற்றொருபொருளுக்குமாற்றாகபரிமாற்றம்செய்வது .

Downloaded From www.nagaicollege.com

பண்டமாற்றுமுறைக்கானநிபந்தனைகள்:

1.இருவருக்கும் அப்பொருள்தேவையாகஇருக்கவேண்டும் .

2.இருவருக்கும்நேரடித்தொடர்புமுக்கியமாககருதப்படும்.

பண்டமாற்றுவணிகத்தின்தடைகள் :

1.இருவருடையதேவைகள்உடன்பாடில்லாமல்இருத்தல் . \

2. பொதுமதிப்பீட்டுஅளவுஇல்லாமை .

3.உற்பத்தியாளர் - நுகர்வோர்நேரடித்தொடர்புஇன்மை .

4.உபரிஇருப்புவைக்கஇயலாதநிலை .

பணம்கண்டுபிடிப்பு - உருவாக்கம் - வணிகம்வளர்ச்சி - விளக்குதல் .

வணிகத்தின்தடைகள்-

பண்டங்கள் மற்றும்பணிகள்பரிமாற்றத்தின்போதுஏற்படும்தடைகளும் ,அவற்றை நீக்கும் வழிகளையும் விளக்குதல் .

1. ஆள்சார்தடை - உற்பத்தியாளர் - நுகர்வோர்சந்திக்கும்வாய்ப்புஇல்லாதது .வியாபாரம் இக்குறையை நீக்குகிறது .

2. .இடத்தடை – ஒருஇடத்தில் உற்பத்தியாகும் பொருள் எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை .போக்குவரத்து இக்குறையை நீக்குகிறது .

3. காலத்தடை – ஒருகுறிப்பிட்டகாலத்தில்உற்பத்தியாகும்பொருள்ஆண்டுமுழுவதும் தேவைப்படும் .பண்டகக்காப்பகங்கள்இக்குறையைநீக்குகிறது .

4. இடர் மற்றும் பொருட்கள்தரம்கெடாமல்இருக்கத்தடை - முறையாகபராமரிக்காத பொருட்கள்தரம் கெடுகிறது .சிப்பம்கட்டுதல் ,குளிர்சாதனவசதி கொண்டகாப்பகங்கள் ஆகியவைஇக்குறையைபோக்குகிறது .

5. நட்டஇடர்பாட்டுத்தடை - போக்குவரத்து ,கட்டுமம் , ஆட்கள் , மற்றும்இயற்கையால் ஏற்படும்நடங்கள்தவிர்க்கமுடியாதவை . காப்பீடுஇக்குறையைநீக்குகிறது .

6. அறிவுசார்தடை- சந்தை நிலவரங்கள் அறிய முடியாததால் தரமான பொருட்கள் பற்றிய அறிவு இல்லாமல் இருப்பது . விளம்பரங்கள் இக்குறையை சரிசெய்கிறது .

7. நிதித்தடை - உற்பத்தியாளர்களுக்கும் ,வர்த்தகர்களுக்கும்தேவையான நேரத்தில்போதுமான நிதிகிடைப்பதில்லை . வங்கிகள்மற்றும் நிதிநிறுவனங்கள் இக்குறையைபோக்குகிறது.

8. பண்டபரிமாற்றத்தடை

9. பொருட்களைத்துல்லியமாகதயாரிப்பதில்தடை

10. பொருட்களைஉற்பத்திஇடத்திலிருந்துநுகர்வோர்வீட்டிற்குகொண்டுசெல்லுதல் .

மாணவர்செயல்பாடு மாணவர்களை புத்தகத்தை படிக்கச்சொல்லி முக்கியமான பகுதிகளை அடிக்கோடு இடச்செய்தல் .தெரிந்து கொள்ள வேண்டிய கலைச்சொற்கள்- வணிகம் ,நாளங்காடி, அல்லங்காடி , பண்டமாற்றுமுறை ,வியாபாரத்தடைகள் .

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வலுவூட்டல் – புதிய மற்றும் கடினமானகருத்துக்களை VIDEO GAMES , QR CODE SCAN செய்துவிளக்கிகூறுதல் .ஆள்சார்தடை ,இடத்தடை , காலத்தடை , நிதிதடை , அறிவுசார்தடை .

மதிப்பீடு - எளிய சிந்தனை வினாக்கள் (LOT):

1. இடத்தடை ------- மூலம்நீக்கப்படுகிறது .

2. பொருட்கள் விற்குமிடம் ----------- எனப்படும் .

நடுத்தரசிந்தனைவினாக்கள்(MOT) :

1. வணிகம் – பொருள் தருக 2
2. .பாண்டியர்ஆட்சிக்காலத்தில்உருவாக்கப்பட்டதுறைமுகங்கள்யாவை ?

உயர்சிந்தனைவினாக்கள் (HOT) :

1. வணிகத்தின்பல்வேறுதடைகளையும்அவற்றைநீக்கும்வழிகளையும்விளக்குக .

செயல்பாடு / தொடர்பணி :

1. .மாணவர்கள் அருகிலுள்ளஅருங்காட்சியகம்சென்றுபழங்காலத்தில்ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டபொருட்களைபார்த்துவரச்செய்தல்.

2. இணையத்தில் உலாவிபண்டையதமிழகத்தின்வர்த்தகமையங்களை பற்றிஒப்படைவு எழுதசெய்தல் .

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு:2. தொழிலின் நோக்கங்கள்
தேதி : ஜூன் - 2 வது வாரம்

NAME : P.KARTHIK,
SCHOOL : KGS MATRIC HR SEC SCHOOL- TIRUPUR
CELL : 9047885101.

கற்றல் நோக்கங்கள் :

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

1. மனிதச் செயல்பாடுகளின் பொருள் மற்றும் வகைகளைத் தெரிந்து கொள்ள முடியும்.

2. பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

3. பொருளாதார நடவடிக்கைகளானவேலைவாய்ப்பு, சிறப்புத் தொழில் மற்றும் தொழில் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்.

4. தொழில் நடவடிக்கைகளின் இயல்புகளைஅறிந்து கொள்ள முடியும்.

5. தொழில், சிறப்புத் தொழில், வேலைவாய்ப்பு ஆகியவைகளை ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

கற்றல் விளைவுகள் ::

மனித செயல்பாடுகளைப் பற்றியும், அதன் வகைகளையும் மாணாக்கர்கள்தெரிந்து கொண்டனர் பொருளாதாரம் சார்ந்த மற்றும் பொருளாதாரம் சாராத செயல்பாடுகளின் கீழ் வரும் நிகழ்வுகள் பற்றி மாணாக்கர்கள் தெரிந்துகொண்டனர்

Downloaded From www.nagaicollege.com

தொழிலின் வகைகளை அவற்றின் செயல்பாடுகளின் அடிப்படையில் எவ்வாறு பிரிக்கப்படுகின்றது என்பதை பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்

தொழில், சிறப்புத் தொழில், வேலைவாய்ப்பு இவற்றின் பொருள், எடுத்துக்காட்டு, வேறுபாடுகள் பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்

நாம் ஒரு தொழில் தொடங்கும் போது எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்::

PPT, Example videos, Online test

பாடத்திற்குள் நுழையும் முன்

பாடத்திற்குள் நுழையும் முன் மாணவர்களிடம், இந்த சமுதாயத்தில் உள்ள வேலைப்பாடுகள், தொழில், சிறப்பு தொழில் பற்றி மாணாக்கர்களின் சொந்த கருத்துகளை கேட்டு தெரிந்து கொள்ளல்

பாட அறிமுகம்::

அத்தியாயம் இரண்டடை தொடங்குவதற்கு முன்பு அத்தியாயம் ஒன்றில் உள்ள வணிகம் எவ்வாறு உருவானது,வணிகத்தின் தேவைகள் பற்றியும் பரிணாம வளர்ச்சி பற்றியும் மாணாக்கர்களிடம் கலந்துரையாடுதல்.

கற்றல் கற்பித்தலில் ஆசிரியரின் செயல்பாடு::

மனித செயல்பாடுகள் அறிமுகம் மற்றும் வகைகள்

பொருளாதாரம் சார்ந்த செயல்பாடு மற்றும் பொருளாதாரம் சாராத செயல்பாடுகளின் இடையே உள்ள வேலைப்பாடுகள்

பொருளாதார நடவடிக்கைகளின் வகைகள்.

தொழில்களின் வகைகள்

தொழில், சிறப்புத் தொழில், வேலைவாய்ப்பு ஒப்பீடுகள்

தொழிலின் தன்மைகள், நோக்கங்கள்.

வேலைவாய்ப்பில் வெள்ளை நிற, நீல நிற கழுத்துப்பட்டை பற்றி அறிமுகம்

ஆகிய கருத்துகளை பற்றி விளக்கமாக பாடம் நடத்துதல்

மாணாக்கர்கள் செயல்பாடு::

மாணாக்கர்களை பாடப்புத்தகத்தை படிக்க சொல்லி, புதிய வார்த்தைகளை அடிக்கோடு இடச் சொல்லுதல், கலைச் சொற்களை படிக்க சொல்லுதல்

மதிப்பீடு::

சிறப்பு தகுதி பெற்றவரால் மட்டுமே _____ தொழில் தொடங்க முடியும்

மருத்துவர் தனது சேவைக்கான கட்டணத்தை பெற்றுக் கொண்டார் எனில் இந்த கூற்று எந்த வகையான பொருளாதார செயல்பாடுகளின் கீழ் வரும்.

Downloaded From www.nagaicollege.com

<u>விரிவாக விடையளித்தல்</u>

மனித செயல்பாடுகளை விவரி

வேலை, தொழில், சிறப்பு தொழில் வேறுபாடுகள் தருக.

<u>ஒப்படைப்பு:</u>

தொழில், சிறப்புத் தொழில்,வேலைவாய்ப்பு போன்றவற்றிக்கு செய்தி தாள் மற்றும், இதர தகவல் ஊடகம் மூலமாக வரும் செய்திகளை மாணாக்கர்களை சேகரிக்க செல்லுதல்

வேலைவாய்ப்பில் கீழ்காணும் கூற்றுகளுக்கு, வெள்ளை கழுத்துப் பட்டை, நீலம் கழுத்துப் பட்டை, என பெயரிடுக.

ஆசிரியர் தொழில்

வங்கி அலுவலர் பணி

பேருந்து ஓட்டுனர் பணி

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 3. தொழில் நடவடிக்கைகளின் வகைகள்

தேதி : ஜூன் - 3 வது வாரம்

NAME : **J S SAYEE LAKSHMI**

SCHOOL : GG HSS SHOLAVANDAN, MADURAI **CELL** : 94867 30743

கற்றல் நோக்கங்கள்:

- தொழில் நடவடிக்கைகளின் வகைகள்,உற்பத்திதொழில் - முதன்மைநிலை, இரண்டாம் நிலைமற்றும் சேவைத் தொழில் வகைகள் அறியலாம்
- உற்பத்தி,வணிகம்,வியாபாரம் ஒப்பிடலாம்.
- வியாபாரத்திற்குஉறுதுணைபுரிபவற்றைபுரிந்துகொள்ளலாம்

கற்றல் விளைவுகள்:

- மாணவர்கள் உற்பத்திதொழில் வகைகளைபுரிந்துகொண்டனர்
- ஒரேபொருளில் வழக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றவணிகம் மற்றும் வியாபாரம் இரு சொற்களின் பொருள் வேறுபாடுகளைபுரிந்துகொண்டனர்
- பொருளாதாரநடவடிக்கைகளில் முக்கியமானபிரிவுகளானஉற்பத்தி,வணிகம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைஉணர்ந்தனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

- கரும்பலகை,Chart,ppt, youtube videos, QR Code Videos

<u>ஆர்வமூட்டல்:</u>

- இன்று காலையில் என்னஉணவுஉண்டாய்?
- எவ்வாறு பள்ளிக்கு வந்தாய், மாணவர்களை பதில் சொல்ல சொல்லி ஆர்வமூட்டல்
- உணவு சமைத்தது யார்? அதுவே தயாரிப்பு (பொருளாதார நடவடிக்கை அல்ல)
- பொதுப் போக்குவரத்து —— உற்பத்தி அல்ல, சேவைத் தொழில் (பொருளாதார நடவடிக்கை)

Downloaded From www.nagaicollege.com

முன்னறிவு

- பாடம் 2ல் கற்ற பொருளாதார மற்றும் பொருளதார சார்பற்ற நடவடிக்கைகளை 2 எடுத்துக்காட்டு கேட்டல்

பாடஅறிமுகம்:

- பொருள் உற்பத்திஒருகுறிப்பிட்ட இடத்தில் நடப்பதையும் பல்வேறு இடங்களில் வாங்கி பயன்படுத்துவோர்க்கு கொண்டு செல்லும் பணிகளே வணிகம் என்பதையும் எடுத்துக் கூறிஉற்பத்திவணிகம் என்ற இருபெரும் பொருளதார நடவடிக்கை வகைகளை பிரித்துணரச் செய்தல்

பாடவளர்ச்சி:

கற்றல் கற்பித்தல் - ஆசிரியர் செயல்

உற்பத்திதொழில் வகைகள்



செயல்பாடுகளின் அடிப்படையில் மற்றும் அளவுகளின் அடிப்படையில் உற்பத்திதொழில் வகைகளைவிளக்குதல் வணிகம் ஸ்ரீ வியாபாரம் ு துணைப்பணிகள்
வியாபாரம்,போக்குவரத்து,வங்கி,காப்பீடு,பண்டகக்காப்பு,தகவல் தொடர்புமற்றும் விளம்பரம் விறபாண்மையும்ஒவ்வொன்றாகவிளக்குதல்
மாணவர் செயல்பாடுகள்

- பாடப் புத்தகத்தைவாசிக்கச் செய்தல். இப்பாடத்தில் மாணவர் அறிந்தபுதியகலைச் சொற்களைஅடிக்கோடிடச் செய்தல்

வலுவூட்டல்:

- Youtube காண்பித்தல் மற்றும் QR code Vidios
- ஒருஉற்பத்தியாளராக, வணிகராக, வியாபாரியாக விருப்பமுள்ள மாணவர்களை பாடம் தொடர்பான தலைப்புகளில் கலந்துரையாடல் நடத்தச் செய்தல்

Downloaded From www.nagaicollege.com

- பாவனை செய்து நடித்துக் காட்டச் சொல்லுதல்
- முக்கிய வார்த்தைகளான உற்பத்தி, வணிகம், வியாபாரம் ஆகியவற்றிற்கு மீண்டும் ஒரு முறை பொருளை விளக்குதல்

மதிப்பீடு

- L O T- அதிகஅளவு இடர்ப்பாடுஎதில் உள்ளது. உற்பத்தியா, வணிகமா, வியாபாரமா?
- M O T - போக்குவரத்துசிறுகுறிப்புவரைக
- H O T- உற்பத்திவணிகம் வியாபாரம் ஒப்பிடுக

குறைதீர் கற்றல்:

- மெல்லகற்கும் மாணவர்களுக்குபாடபுத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறுவினாக்களுக்குவிடைஅளிக்குமாறுபயிற்சிஅளித்தல்

தொடர் பணி:

- பள்ளிக்குஅல்லதுவீட்டிற்குஅருகில் உள்ளவியாபாரநிறுவனங்கள் மற்றும் உற்பத்திநிறுவனங்கள் பெயர்களைகுறிப்பிடுமாறுபணித்தல்
- மூன்றாம் (Tertiary),நான்காம் (Quaternary) ,மற்றும் ஐந்தாம் நிலை (Quinary) சேவைத் தொழில்கள் பற்றியகருத்துக்களை Youtube ல் சென்றுதிரட்டிஎழுதிவரச் செய்தல்

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு:4. தனியாள் வணிகம்

தேதி : ஜூன் - 4 வது வாரம்

NAME : BALASHUNMUGANANTHAM

SCHOOL: Sourastra Boys HSS

Madurai. CELL : 6380848 005

கற்றல் நோக்கங்கள் :

தொழில் அமைப்புகளின் வடிவங்கள் பற்றி அறிந்துகொள்ள முடியும். தனியார் வணிகம், பொருள் பண்புகள், நன்மைகள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும்.

கற்றல் விளைவுகள் :

தனிவணிகத் தொழில் நெகிழ்வு தன்மையும், விரைவானமுடிவு எடுப்பதையும் உணர்த்தும் வகையில் குளிர்காலத்தில் டீக்கடைவைத்து வியாபாரம் செய்யும் தனிவணிகர் கோடைகாலத்தில் குளிர்வானகடையாகமாற்றி வியாபாரம் செய்யும் நெகிழ் தன்மையும் விரைவாக முடிவு எடுக்கும் முறையின் மூலம் காலத்திற்கு ஏற்றாற் போல் மாற்றிக் கொள்ளும் முறையை தெரிந்து கொண்டனர். வாடிக்கையாளருடன் நேரடிதொடர்பு கொண்டுவாடிக்கையாளர் விருப்பு, வெறுப்புகளை அழகு நிலையம் மற்றும் தையலகம் மூலம் தெரிந்துகொண்டனர்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் : PPT வீடியோக்கள் OR குறியீடு இணையம் அல்லதுYou Tube வீடியோக்கள், தனிவணிகர் செயல்பாடுதொடர்பானவிளக்கப்படம்

முன்னறிவு : தொழிலின் அடிப்படைகூறுகளானபண்டமாற்றுவணிகமுறைகள் வணிகம் மற்றும் தொழிலின் பல்வேறுதடைகளானஆள்சார் தடை, இடத்தடை, காலத்தடை, நிதித்தடை, இடர்பாட்டுதடை,

Downloaded From www.nagaicollege.com

நினைவுபடுத்தி உற்பத்தி தொழில்களையும் மற்றம் வியாபாரத்திற்குதுணை புரிய கூடிய போக்குவரத்துபண்டக்காப்பு காப்பீடுமற்றும் வங்கிகளையும் அவற்றின் பணிகளையும் நினைவுபடுத்துதல்.

பாடஅறிமுகம் : தனியாள் வணிகம் என்பதுதனிஒருநபரைக் கொண்டுநடத்துவது. உன் அருகில் உள்ளபலசரக்குகடையில் உள்ள முலாளியாக மாணவர்களை நினைக்கச் சொல்லிஅந்தகடைக்கு தேவையானமளிகைசாமான்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றைசந்தைக்குப் போய் வாங்கிஅதைவிற்றுஅதன் மூலம் கிடைக்கும் லாபம் அல்லதுநட்டம் முழுவதும் அவருக்குமட்டும்தான் என்பதைநினைவுபடுத்திஅறிமுகம் செய்தல்

பாடவளர்ச்சி:

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

ஆசிரியர் செயல்பாடு

தனியார் வணிகம் - கூட்டுசாராநிறுவனம் குறைவான மூலதனம் - பலசரக்கு கடை, பெட்டிக் கடை விரைவானமுடிவு - மருத்துவர், வழக்கறிஞர், பங்குத் தரகர் குறைந்த இடர்- ஒர்க் ஷாப் வாடிக்கையாளர் விருப்பு, வெறுப்பு - அழகுநிலையம், தையலகம் வரையறாபொறுப்பு - கடன் எளிதில் பெறமுழுலாபம் -தனிவணிகர்களுக்கு அரசவிதிமுறை பின்பற்றாமை நெகிழ்வு தன்மை - காலத்திற்கு ஏற்ப தொழிலை மாற்றுதல்

குறைபாடுகள்: மூலதனம் - வரையறுக்கப்பட்டது மேலாண்மைதிறன் - தனிஒருவர், குறிப்பிட்டஎல்லைக்குமேல் பலன் தராது வரையறாபொறுப்பு - சொந்தசொத்துபறிமுதல் செய்யப்படும் சிறப்பு தேர்ச்சி - இல்லை அவசரமுடிவு - ஆபத்து

மாணவர் செயல்பாடு:

பள்ளி விடுமுறைநாட்களில் வீட்டிற்கு அருகில் மாங்காய் கடை வைத்து அதன் மூலம் கிடைக்கும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ள சொல்லுதல்

வலுவூட்டல் ஒரு தனிவணிகர் -------------- முடிவு எடுக்கலாம்

விடை: விரைவாக.

தனி வணிகத்தின் சிறப்பு அம்சம் ---------

விடை: நெகிழ்வத் தன்மை.

------------ அமைப்பு பழமையான தொழில் அமைப்பாகும்

விடை: தனியாள் வணிகம்.

மதிப்பீடு எளிதான சிந்தனை வினா

தனி வணிகத்தை தொடங்க --------- நபர்

விடை: 1

நடுத்தர சிநதனை வினா

தனி வணிகரின் பொறுப்பு ----------

விடை: வரையறுக்கப்படாதது

உயர் சிந்தனைவினா

தனி வணிகத்தை பதிவு செய்தல்

விடை: தேவை இல்லாதது.

குறைதீர் கற்றல் கருத்துக்களை புரிவதில் சிரமமுள்ள மாணவர்களைஅடையாளம் கண்டு எளிதில் புரியும் வண்ணம் மற்றும் தேர்வில் விடைகளை தெளிவாக எப்படி எழுத வேண்டும் என்பதை தனிப்பட்ட

Downloaded From www.nagaicollege.com

முறையிலும், பொதுவாகவும் எடுத்துரைத்தல், தனிவணிகர் பண்புகள், நன்மைகள், குறைபாடுகள் ஆகியவற்றை புரியும் வண்ணம் மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்

தொடர் பணி செய்தித்தாள்களில் தனியாள் வணிகத்தைபற்றிவரும் கருத்துக்களைவாசித்துகாட்டுதல்

வகுப்பு : XI Std

பாடம் : **வணிகவியல்**

தலைப்பு **அலகு 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்**

பாடம் 5 இந்து கூட்டுக் குடும்பம் மற்றும் கூட்டாண்மை

தேதி : ஜீன் 5 வது வாரம்

Prepared by: P.KARTHIKEYAN
S.U.M.HSS ROYAPPANPATTY, THENI-DT.
Cell No: 9943065966.

கற்றல் நோக்கம்:

இந்து கூட்டுக் குடும்ப வணிகம், பொருள்

கூட்டாண்மை – பொருள், பண்புகள், நன்மைகள் மற்றும் தீமைகள்

கூட்டாண்மை ஒப்பாவணம் மற்றும் உள்ளடக்கம்

கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள்

கூட்டாண்மை வகைகள், கூட்டாளிகளின் வகைகள்

கூட்டாண்மைக் கலைப்பு

கற்றல் விளைவுகள்:

இந்து கூட்டுக் குடும்பம்:

இந்து கூட்டுக் குடும்ப வணிகம் இந்தியாவில் மட்டுமே காணப்படும்.
இந்த வியாபார அமைப்பு குடும்ப உறுப்பினர்களால் உரிமையாக்கப்பட்டு குடும்ப சொத்தில் வாரிசு உரிமை உள்ள நபர்களால் நடத்தப்படுகிறது. தலைமை உறுப்பினர் கர்த்தா.

கூட்டாண்மை:

தனியாள் வணிகத்தில் உள்ள குறைகளை நீக்க ஏற்பட்டது தான் கூட்டு வணிக அமைப்பாகும். 1932 ஆம் ஆண்டு கூட்டாண்மைச் சட்டம் இயற்றப்பட்டு இந்தியக் கூட்டாண்மை நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமாக இயற்றப்பட்டு, தோற்றுவிப்பு, மேலாண்மை, மற்றும் கலைப்பு முதலியவை நெறிப்படுத்துகிறது.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்: PPT, VIDEOS, EDUCATIONAL GAMES, MAGAZINES, QR CODES, ONLINE TEST

முன்னறிவு:

முந்தைய பாடமான தனியாள் வணிகத்துடன் கூட்டாண்மை பாடத்தை தொடர்புபடுத்தல்.

இந்து கூட்டுக் குடும்ப வணிகமுறை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதை எடுத்துரைத்தல்.

Downloaded From www.nagaicollege.com

பாட அறிமுகம்:

இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் இந்து சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டு நடத்தப்படுகிறது.

பல நபர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாண்மை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்றும், கூட்டாக நிறுவனமாக உருவாக்கப்பட்டு கூட்டாண்மைத் தொழில் நடைபெறும்.

பாட வளர்ச்சி

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

ஆசிரியர் செயல்பாடு

இந்து கூட்டுக் குடும்பம் அறிமுகம் பொருள் மற்றும் இயல்புகள்

இந்து சட்டத்தின்படி கட்டுப்படுத்தல்

மேலாண்மை

பிறப்பால் உறுப்பினர்

பொறுப்பு

நீடித்த வாழ்வு

கூட்டாண்மையின் பொருள் வரைவிலக்கணம்

கூட்டாண்மையின் இயல்புகள் நன்மைகள், குறைபாடுகள்

கூட்டாண்மை ஒப்பாவணம் மற்றும் உள்ளடக்கம்

கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள்

கூட்டாண்மையின் வகைகள்

கூட்டாளிகளின் வகைகள்

உழைக்கும் கூட்டாளி

உறங்கும் கூட்டாளி

பெயரளவு கூட்டாளி

இரகசிய கூட்டாளி

இளவர் கூட்டாளி

கூட்டாண்மைக் கலைப்பு

நிறுவனக் கலைப்பு

கூட்டாண்மைக் கலைப்பு

மாணவர் செயல்பாடு:

மாணவர்களை பாடப் புத்தகத்தை படிக்கச் சொல்லி முக்கியமான வார்த்தைகளை அடிக்கோடு இடச்செய்தல். கலைச் சொற்களை படிக்கச் சொல்லுதல்.

Downloaded From www.nagaicollege.com

வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை VIDEO GAMES, QR CODE SCAN செய்து விளக்கி கூறுதல்.

தயாபாகா மிட்டாக்சரா பரஸ்பர முகமை

மதிப்பீடு:

எளிய சிந்தனை வினாக்கள் (LOT)

கர்த்தா என்பவர் யார்?

நடுத்தர சிந்தனை வினாக்கள்(MOT)

கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

உயர் சிந்தனை வினாக்கள் (HOT)

கூட்டாண்மைக் கலைப்பின் வகைகளை விவரி.

செயல்பாடு:

இந்து கூட்டுக் குடும்பம் தொழில்கள் பற்றியும் நடைமுறையில் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் அறிந்து வர சொல்லுதல்.

மாணவர்களின் ஊர்களிலுள்ள கூட்டாண்மை நிறுவனங்களுக்கு சென்று கூட்டாண்மைத் தொழில்கள் பற்றியும், கூட்டாளிகளின் நிறுவனப் பங்களிப்பையும் தெரிந்து வர செய்தல்.

தொடர் பணி:

இந்து கூட்டுக் குடும்பம் முறையில் தொழில்கள் செய்யும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டாடா சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் நிறுவனம் சார்ந்த விவரங்களை செய்திதாள், youtube ஆகியவற்றின் வழியாக மாணவர்களை தெரிந்து வரச் செய்தல்.

தேனி மாவட்டம் சீப்பாலக்கோட்டையில் இயங்கி வரும் தேனி கம்பம் பள்ளாத்தாக்கு வாழை விவசாயி உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட் (கூட்டாண்மை நிறுவனம்) செயல்படும் விதம் பற்றி விவரித்தல், மாணவர்களை நேரில் சென்று பார்க்கச் சொல்லுதல்.

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 6 .கூட்டுப் பங்கு நிறுமம்

தேதி : ஜூலை - 1 வது வாரம்

NAME : S.M. RAJENDRAN ,
GHSS THANGAMMALPURAM.
THENI (DIST)
CELL : 9042117151

கற்றல் நோக்கம் :

கூட்டுப் பங்கு நிறுமம் பொருள் , பண்புகள் , நன்மைகள் மற்றும் குறைபாடுகளை அறிந்து கொள்ளுதல் கூட்டுப்பங்கு நிறுமத்தின் வகைகளை புரிந்து கொள்ளுதல்.

அமைப்பு முறையீடு அதன் உள்ளடக்கம் விளங்கிக் கொள்ளுதல் .

சங்க நடைமுறைவிதிகள் அதன் உள்ளடக்கம் தெரிந்து கொள்ளுதல் .

Downloaded From www.nagaicollege.com

தகவல் அறிக்கை அதன் உள்ளடக்கம் ஆகியவற்றைப் பற்றி புரிந்து கொள்ள முடியும்.

கற்றல் விளைவுகள் :

நாம் செய்தித்தாள்களிலும் மற்றும் தொலைக்காட்சி விளம்பரத்திலும் பார்க்கின்ற பல நிறுமங்கள் கூட்டுப் பங்கு நிறுமங்களாகவே இருக்கின்றன எடுத்துக்காட்டு , இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் , டாடா மோட்டார்ஸ் , ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட். ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா முதலியன . இந்த நிறுவனத்தின் பொருள் மற்றும் பண்புகள் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர் . நிறுமத்தின் வகைகளை மாணவர்கள் புரிந்து கொண்டனர் . நிறுமத்தின் அமைப்பு முறையீடு , சங்க நடைமுறை விதிகள் , தகவல் அறிக்கை பற்றி மாணவர்கள் விளங்கிக் கொண்டனர் .

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :

videos , QR code scanner , magazines .

முன்னறிவு :

அத்தியாயம் 4 மற்றும் 5 இல் உள்ள தனியாள் வணிகம், இந்து கூட்டுக் குடும்பம் ,கூட்டான்மை பாடங்களை நினைவுபடுத்துதல் அவைகளில் உள்ள குறைபாடுகளை கலைவதற்காகவே கூட்டுப் பங்கு நிறுமம் ஆரம்பிக்கப்பட்டது .

பாட அறிமுகம் :

நாம் அன்றாட பயன்படுத்தும் ஐந்து பொருட்களை பாக்கெட் உடன் சேகரித்து அவற்றிலுள்ள நிறுமங்களின் பெயர்களை குறிப்பிட்டு ,அந்த நிறுவனங்களில் எது தனியார் நிறுவனங்கள் , எது பொதுத்துறை நிறுவனங்கள், எது பன்னாட்டு நிறுவனங்கள் என குறிப்பிட்டு நிறுமங்கள் பற்றி அறிமுகம் செய்வது .

பாட வளர்ச்சி

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

ஆசிரியர் செயல்பாடு :

இந்திய நிறுமச் சட்டம் 2013 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது

நிறுமம் என்பது நீடித்த வாழ்வுடனும் நிலைபெற்றுத் தொடர்ச்சியுடனும் , பொது முத்திரையுடனும் கூடிய சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர் . நிருமத்தின் பொருள் மற்றும் இலக்கணம் ,நன்மைகள் மற்றும் குறைபாடுகள் , வகைகள் ,அமைப்பு முறையீடு ,சங்க நடைமுறை விதிகள் ,தகவல் அறிக்கை பற்றி ஆசிரியர் விளக்குதல் .

Downloaded From www.nagaicollege.com

மாணவர் செயல்பாடு :

ஆசிரியர் பாடம் நடத்தும் போது முக்கிய குறிப்புகளை குறிப்பெடுத்தல் , புதிய வார்த்தைகளை அடிக்கோடிடச் செய்தல் , பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி அதில் உள்ள வினாக்களுக்கு எவ்வாறு பதில் எழுதுவது என்பதை சுயமாக சிந்தித்து செயல்பட செய்தல் .

வலுவூட்டல் :

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை மீண்டும் ஒரு முறை எளிமையாக விளக்குதல் .
videos , QR code scan செய்து விளக்கிக் கூறுதல் . பிடிப்பு நிறுமம் துணை நிறுமம் ,
அயல்நாட்டு நிறுமம் , பன்னாட்டு நிறுவனம் , பட்டய நிறுமம் .

மதிப்பீடு :

எளிய சிந்தனை வினாக்கள் :

ஒரு நாட்டின் அரசராலோ , அரசியலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் ____________ எனப்படும் .

நடுத்தர சிந்தனை வினாக்கள் :

அரசு நிறுமம் என்றால் என்ன ?

உயர் சிந்தனை வினாக்கள் :

அமைப்பு முற ஏட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை ?

குறைதீர்க் கற்றல் :

பாடக் கருத்துக்களை புரிவதில் சிரமமுள்ள மாணவர்களை அடையாளம் கண்டு , அவர்களுக்கு புரியும் வகையில் எளிமையாக விளக்கிக் கூறுதல் , படிப்பதற்கு ஆர்வமூட்டுதல் , சிறப்பு பயிற்சி அளித்தல் , திட்டம் தீட்டுதல், தேர்வுக்கு தயார் செய்தல்.

செயல்பாடு :

மாணவர்களை ஐந்து அணிகளாக பிரித்து நிறுமங்களின் வகைகளை உரையாடச் செய்வது .

தொடர் பணி :

செய்தித்தாள்களில் நிறுமங்கள் பற்றி வரும் கருத்துக்களை , செய்திகளை வாசித்துக் காட்டுதல் .

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 7. கூட்டுறவு அமைப்பு.

தேதி : ஜூலை முதல் வாரம்

NAME : **மா. தாமரைநங்கை**

தியாகி வள்ளியம்மை அரசு மேல்நிலைப் பள்ளி,

தில்லையாடி.மயிலாடுதுறை (மா).

CELL : 9788813983

Downloaded From www.nagaicollege.com

கற்றலின் விளைவுகள்:

மாணவர்கள், கூட்டுறவு என்பதன் பொருள் பற்றியும் கூட்டுறவின் கொள்கைகள் பற்றியும் அதன் சிறப்பு மற்றும் வகைகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

கற்பித்தல் துணைக் கருவிகள்:

படத்தொகுப்பு, கூட்டுறவு சங்க உறுப்பினர் அட்டை,, co-op tex card, PPT.

ஆயத்தம்:

“கூடி வாழ்ந்தால் கோடி நன்மை”, “கூட்டுறவே நாட்டுயர்வு”, “கூடி தொழில் செய்” என்ற பழமொழிகள் ஒற்றுமை மற்றும் ஒருவருக்கொருவர் உதவி செய்தல் போன்றவற்றை விளக்குகின்றன.

கூட்டுறவு என்பதன் பொருள் “இணைந்து பணியாற்றுதல்”.

“தன் கையே தனக்குதவி”, என்பதற்கிணங்க, பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்கள் தம் பொதுவான பொருளாதார நலனை பெருக்கிக் கொள்ள தன்னிச்சையாய்சேரும் சங்கமே கூட்டுறவு சங்கம் என கூறி ஆயத்தம் செய்தல்.

முன்னறிவு:

முன் பாடமான கூட்டு பங்கு நிறுமம் பற்றி எடுத்துக் கூறி அதன் நீட்சியான சேவை மனப்பான்மையுடன் லாப நோக்கம் இல்லாமல் செயல்படக்கூடிய அமைப்புதான் கூட்டுறவு என அறிமுகப்படுத்துதல்.

பாடப்பொருள் -கற்பித்தல் :

கூட்டுறவு – முதலாளித்துவம்,பொதுவுடமை தத்துவம் இவை இரண்டிற்கும் இடைப்பட்டது.

குறிக்கோள் – “ஒவ்வொருவரும் அனைவருக்காக”, “அனைவரும் ஒவ்வொருவருக்காக”.

கூட்டுறவு – co-operari – Latin word – இணைந்து பணியாற்றுதல்.

துவக்கம். -- 150ஆண்டுகளுக்கு முந்தையது.

ROBERT OVAN-- 1844ல் இராக்டேல் (ENGLAND) --28 நெசவாளிகள் இணைந்து துவக்கியது. முதல் கூட்டுறவு இயக்கம்.

இந்தியாவில் 1901 ல் கடும் பஞ்சத்தின் விளைவால், 1904ல்அரசு கூட்டுறவு சங்கங்கள் தோற்றம். கடன் வசதி மட்டும்..

1912ல்விரிவாக்கம்-- உள்ளடக்கங்கள் – மேலாண்மை, கட்டுப்பாடு.

1914ல்மெக்லகான் தலைமையில் செயற்குழு கூட்டுறவு சங்க செயல்பாடுகளை ஆய்வு செய்தது. ஆய்வறிக்கையின் படி கூட்டுறவு அமைப்பின் அதிகாரம் மத்திய அரசிடம் இருந்து மாநில அரசுக்கு மாற்றம்..

வரையறை:

H C.ஹால்வேர்ட் – உறுப்பினர்களின் பொருளாதார நலனை பெருக்கிக் கொள்ள மனிதர் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு.

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

சர்.ஹோரேஸ்ப்ளங்கெட் : சுய உதவி வலிமை பெற்றதாக செய்யும் அமைப்பு கூட்டுறவு ஆகும் சிறந்தவிவசாயம், சிறந்த வணிகம், சிறந்த வாழ்க்கை என்பதைத் தவிர வேறு இல்லை.

கூட்டுறவின் இயல்புகள்:

1. தன்னிச்சையாய்சேரும் சங்கம்:எவரும் எப்போதும் உறுப்பினராக சேரலாம். விரும்பும் போது விலகலாம்.

2.சமத்துவம் : சம உரிமை. அதிக மூலதனம் செலுத்துபவருக்கு அதிக உரிமை என்பது இல்லை. அனைவரும் சமமே.

3. மக்களாட்சி மேலாண்மை:ஒரு நபர் ஒரு வாக்கு என்ற மக்களாட்சி முறையில் மேலாண்மை செய்யப்படுகிறது.

4. நோக்கம்: சேவையே முதல் நோக்கம். லாபம் ஈட்டுதல் இரண்டாவது நோக்கம்.

5. பன்மர் உறுப்பினர்: குறைந்த பட்சம் 25 உறுப்பினர்கள். அதிகபட்சம் வரையறை இல்லை.

கூட்டுறவு-நன்மைகள்

1. அமைப்பது எளிது
2. மக்களாட்சி மேலாண்மை
3. பொதுநலன்
4. வரிச்சலுகை
5. வேலை வாய்ப்பு

குறைபாடுகள்:

1. வரையறு முதல்
2. திறமையற்றமேலாண்மை
3. ரகசியம் காக்க இயலாமை
4. ஒற்றுமையின்மை
5. தன்னிச்சையாக செயல்பட முடியாதது

கூட்டுறவு சங்கத்திற்கு எடுத்துக்காட்டுகள்

** இந்தியன் காபி ஹவுஸ்

** இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட்

** இந்திய விமான நிறுவனம்(சரக்கு)

** கோ- ஆ.:ப் டெக்ஸ்

கூட்டுறவு வகைகள்

1. நுகர்வோர் கூட்டுறவு
2. உற்பத்தியாளர்கள் கூட்டுறவு
3. கடன் கூட்டுறவு
4. வீட்டு வசதி கூட்டுறவு

Downloaded From www.nagaicollege.com

5. **உழவர் கூட்டுறவு**
6. **சந்தைப்படுத்துதல் கூட்டுறவு.**

ஆசிரியர் செயல்பாடு..

சர்வதேச கூட்டுறவு இயக்கத்தின்ஏழு வண்ண வானவில் கொடி ஒரு பொதுவான அடையாளமாகும். 1922ல்ஜெர்மனியில் உள்ள எஸ்சனில் என்ற நகரில் பன்னாட்டு கூட்டுறவு கூட்டு மன்றத்தின் மூலம். ICA என்ற அமைப்பு ஜூலை1923ல் நடைபெற்ற முதல் கூட்டுறவு தினத்தில் சர்வதேச கூட்டுறவு சின்னம் மற்றும் ஒரு கொடியை வடிவமைத்தது. இந்த விவரத்தை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல்.

மாணவர் செயல்பாடு:

கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்வதற்கு செய்ய வேண்டிய நடைமுறைகள், கூட்டுறவு சங்கத்தின் பதிவுச் சான்றிதழ்,கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுக்கும் நடைமுறை, இவை பற்றி அறிய செய்தல்.

மதிப்பீடு :

LOT: 1.**கூட்டுறவின்நோக்கம் யாது?**

MOT: 1. **கூட்டுறவுஅமைப்புகளின் முதன்மையான நோக்கம் யாது?**

2. **கூட்டுறவு வரையறு.**

HOT. 1.**ராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?**

2. **கூட்டுறவின் கொள்கைகள்யாவை?**

தொடர் பணி: கூட்டுறவு சங்கத்தின் வகைகளை கூறுக.

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு: 8 . பன்னாட்டு நிறுமங்கள்
தேதி : ஜூலை 4 வது வாரம்

NAME : M GANAPATHI
S V GHSS SAMATHUR
Pollachi
CELL : 99426 03638

கற்றல் நோக்கங்கள்:

மாணவர்கள் ,

- பன்னாட்டு நிறுவனங்களின் பொருள் மற்றும் இலக்கணம் அறியச் செய்தல்.
- பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை அறியச் செய்தல்.
- பன்னாட்டு நிறுவனங்களின் உதாரணங்களை அறியச் செய்தல்.

கற்றல் விளைவுகள்: மாணவர்கள் ,

>>பன்னாட்டு நிறுவனங்களின் பொருள் மற்றும் இலக்கணம் அறிந்து கொள்ளுதல்.

>>பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை அறிந்து கொள்ளுதல்.

Downloaded From www.nagaicollege.com

>>பன்னாட்டு நிறுவனங்களின் உதாரணங்களை அறிந்து கொள்ளுதல்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

இந்திய பன்னாட்டு நிறுவனங்களின் சின்னங்களின் நகல்.

இந்தியாவில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களின் பெயர்களின் நகல்.

செய்தித்தாளில் வந்துள்ள பன்னாட்டு நிறுவனங்களின் பெயர்கள்.

பன்னாட்டு நிறுவனங்களைப் பற்றிய PPT.

ஆயத்தம்:

இதற்கு முன் கற்ற பாடப்பகுதியான கூட்டுறவு அமைப்பு என்ற தலைப்பின் கீழ் கற்ற பகுதிகளை நினைவு கூறுதல்

மாணவர்கள் தங்களுக்கு தெரிந்த நிறுவனங்களின் பெயர்களை கூற வைத்தல்.

மாணவர்கள் தாங்கள் பயன்படுத்தும் பொருட்களை எந்த நிறுவனங்கள் நமக்கு தயாரித்து அளிக்கிறது என்பதை கூற வைத்தல்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்:

அறிமுகம்

பன்னாட்டு நிறுவனங்கள் என்பது ஒரு நாட்டில் தொடங்கப்பட்டு அதன் செயல்பாடுகள் தாய் நாட்டை கடந்து கூடுதலாக பல நாடுகளில் கூட்டுருவாக்கப்படுவதாகும்.

இந்த நிறுவனங்களின் தலைமையகம் எப்பொழுதும் தாய் நாட்டிலேயே இருக்கும்.

பன்னாட்டு நிறுமம் வரைவிலக்கணம்

பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்……… நைல். H. ஜேகோபி.

பன்னாட்டு நிறுமங்களின் நன்மைகள்:

* குறைந்தபட்ச கூலி.
* தரமான பொருட்கள்.
* பயன்படுத்தப்படாத வளங்களை முறையாக பயன்படுத்துதல்.
* நாட்டின் செலாவணிச் செலுத்து நிலை வளர்ச்சி.
* தொழில்நுட்ப வளர்ச்சி.
* மேலாண்மை வளர்ச்சி.
* சர்வாதீனத்தைக் கட்டுப்படுத்துகின்றன.
* வாழ்க்கைத் தரம் உயர்கின்றது.
* சர்வதேச சகோதரத்துவத்தையும் கலாச்சாரத்தையும் காக்கிறது.

பன்னாட்டு நிறுவனங்களின் குறைபாடுகள்:

-- உள்ளூர்த் தொழில்களுக்கு அபாயம்.

Downloaded From www.nagaicollege.com

-- வழக்கொழிந்த தொழில்நுட்பத்தை மாற்றுதல்.

-- ஏழை மக்களுக்கு நன்மையில்லை.

-- தனிமனித சுதந்திரத்திற்கு அபாயம்.

-- உள்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு.

-- வலுவான தகுநிலையை தவறாக பயன்படுத்துதல்.

-- இயற்கை வளங்களைச் சுயநலத்திற்கு பயன்படுத்துதல்.

-- அயல்நாட்டின் சுய நல வளர்ச்சிப் போக்கு.

-- உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் புறக்கணிப்பு.

வலுவூட்டடல்:

மாணவர்கள் கீழ்கண்ட விவரங்களை அறிந்து கொள்ள செய்தல்.

பன்னாட்டு நிறுவனங்கள் பெயர்கள்

Examples: *Bata*, SONY, TIMEX, micromax, TVS

வேலைவாய்ப்பு

பன்னாட்டு நிறுவனகளால் வேலை வாய்ப்பு அதிகரிப்பு.

தொழில்நுட்ப வளர்ச்சி

அனைத்து நாட்டு தொழில்நுட்பத்தை உணர முடியும்

மதிப்பீடு:

எளிய சிந்தனை வினாக்கள் (LOT)

1. கோ கோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாக கூறலாம்?

2. பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு நிறுவனமாக அமைவதற்கு .... ம் மேற்பட்ட நாட்டில் நிறுவனங்களை கொண்டிருக்க வேண்டும்.

3. பஜாஜ் நிறுமத்தின் தலைமையகம் ....

நடுத்தர சிந்தனை வினாக்கள் (MOT)

1. பன்னாட்டு நிறுவனம் என்றால் என்ன?

2 .ஒரு நாட்டின் எல்லையை கடந்து வணிக நடவடிக்கைகளை தொடரும் நிறுவனத்திற்கு .... என்று பெயர்.

3. பன்னாட்டு நிறுவனத்தின் வேறு பெயர்களை கூறுக

4. இயற்கை வளங்களை ஒரு பன்னாட்டு நிறுவனம் தன்னுடைய சுய லாபத்திற்கு பயன்படுத்துவதால் என்ன ஏற்படும்?

உயர் சிந்தனை வினாக்கள் (HOT)

1. சில்லோர் முற்றுரிமை என்றால் என்ன?

2. இந்திய பன்னாட்டு நிறுமங்களின் பெயர்களை பட்டியலிடுக.

3. பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை இரண்டு குறிப்பிடுக.

4. TIMEX நிறுவனத்தின் துணை நிறமம் எந்த நாட்டில் உள்ளது?

5. பன்னாட்டு நிறுமத்தின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை கூறுக.

Downloaded From www.nagaicollege.com

செயல்பாடு:

செய்தித்தாள் வரும் பன்னாட்டு நிறுவன விளம்பரங்களை சேகரிக்கச் சொல்லுதல்.

அயல்நாட்டில் உள்ள ஏதேனும் இரண்டு இந்தியப் பன்னாட்டு நிறுவனங்களை எழுத சொல்லுதல்.

இந்தியாவில் உள்ள ஏதேனும் இரண்டு அயல்நாட்டு பன்னாட்டு நிறுவனங்களின் பெயர்களை எழுத சொல்லுதல்.

தொடர் பணி:

பன்னாட்டு நிறுவனப் பொருட்களின் பெயரை எழுதி வரச் சொல்லல் .

வகுப்பு தேர்வு வைப்பதன் மூலம் மாணவர்கள் பாடக்கருத்தை புரிந்து கொள்கிறார்கள்

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு:9.அரசு அமைப்பு
தேதி : ஜூலை - 3 வது வாரம்

NAME : T.NAGARANI.
SCHOOL : GBHSS PERAIYUR.
Madurai.
CELL : 94865 07757

கற்றல் நோக்கங்கள் :

- துறைசார் நிறுவனங்கள்பொருள், இயல்புகள் நிறைகள் குறைகள்.
- பொது கழகங்களின் பொருள், இயல்புகள் ,நிறைகள் குறைகள்.
- அரசு நிறுமங்களின் பொருள், இயல்புகள், நிறைகள் குறைகள்.

கற்றல் விளைவுகள் :

- துறை சார் நிறுவனங்களின் பொருள்,இயல்புகள், நிறைகள் மற்றும் குறைகளை பற்றி தெரிந்து கொள்கின்றனர்.
- பொதுக் கழகங்களின் பொருள்,இயல்புகள், நிறைகள் மற்றும் குறைகள் பற்றி அறிந்து கொள்கின்றனர்.
- அரசு நிறுவங்களின் பொருள்,இயல்புகள், நிறைகள் மற்றும் குறைகளை பற்றி தெரிந்து கொள்கின்றனர்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்

படங்கள் ,வீடியோ,ppt.

முன்னறிவு :

1. மாணவர்களிடம் யாரெல்லாம் ரயிலில் பயணம் செய்துள்ளீர்கள் அது எந்த துறையில் வருகிறது என வினவுதல்.
2. தற்போதைய ரயில்வேத்துறை அமைச்சர் யார் என கேட்டல்.

Downloaded From www.nagaicollege.com

பாட அறிமுகம் :

. நாட்டின் வளர்ச்சியிலும் மக்களின் நலனிலும் அதிக அக்கறை உள்ள அமைப்பு அரசு அமைப்புகள்.

பாட வளர்ச்சி :

- மக்கள் வளர்ச்சியிலும் சேவையிலும் முக்கிய இடம் வகிப்பது அரசு அமைப்புகள்.
- தனியார் அமைப்புகள் லாபம் நோக்கம் கொண்டு செயல்படுவதால் அரசு பல அமைப்புகளை ஏற்று நடத்துகின்றது.

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்:

- துறை வாரி அமைப்பின் பொருள்.
- துறை வாரி அமைப்பின் இயல்புகள்.
    - இறுதியான பொறுப்புகள்.
    - அரசின் நிதி உதவி.
    - கணக்கியலும் தணிக்கையும்.
    - மேலாண்மை.

சட்ட விலக்களிப்பு.

துறை வாரி அமைப்பின் நிறைகளும் குறைகளும்.

1. எளிமையான அமைப்பு.
2. பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடி கட்டுப்பாடு.
3. இரகசியம் காத்தல்.
4. பொதுமக்களுக்கு வரி சுமை குறைவு.
5. சமூக மாற்றத்திற்கான கருவி.
6. அமைச்சகத்தின் விதிகள் மற்றும் செயல்பாடுகள் முறையாக பின்பற்றப்படும்.

- துறை வாரி நிறுவனங்களின் குறைகள்.
    1. தாமதமும் சிகப்பு நாடா போக்கும்.
    2. கூடுதல் வரி சுமை.
    3. போட்டியின்மை.
    4. பணியில் சராசரி அணுகுமுறை.
    5. அரசின் தலையீடு
    6. மேலாண்மை திறமை குறைவு என்ற குற்றச்சாட்டு.
    7. நிதிச் சார்பு.

- பொதுக்கழகத்தின் பொருள்.
- பொதுக் கழகத்தின் இயல்புகள்.
    1. தனித்தியங்கும் சட்டத்தன்மை.

www.Padasalai.Net

Downloaded From www.nagaicollege.com

2. நீடித்த நிலைத்த தன்மை.
3. அரசின் முதலீடு.
4. நிதி தன்னாச்சி உரிமை.
5. இயக்குனர் அவையால் நிர்வாகம்.
6. பணியாளர்கள் நியமனம்.
7. பதில் சொல்லும் கடமை.

- பொதுக் கழகத்தின் நிறைகள்:
  1. தன்னாட்சி உரிமை.
  2. சட்ட அமைப்புகளின் கட்டுப்பாடு.
  3. தகுதி மற்றும் நிறைவான. அலுவலர்கள்.
  4. தயார் நிலை.
  5. அரசின் தலையீடு இன்மை.
  6. குறைந்த அளவிலான சுரண்டலுக்கே வாய்ப்பு.
  7. நியாயமான விலை கொள்கை.
- பொதுக் கழகத்தின் குறைகள்:
  1. தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை.
  2. சர்வாதீன அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்.
  3. நெகிழ்வு தன்மையற்ற அரசியல் அமைப்பு.
  4. குறைவான மேலாண்மை திறமை.
  5. சிறப்பு சட்டம் இயற்றுவதில் சிக்கல்.
  6. முரண்பாடுகள்.
- அரசு நிறுமத்தின் பொருள்.
- அரசு நிறுமத்தின் இயல்புகள்:
  1. நிறும சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்.
  2. அரசின் நிர்வாக முடிவு.
  3. நீடித்த நிலைத்த தன்மை.
  4. முழுவதும் அல்லது பெரும்பான்மையான மூலதனத்தை அரசு வழங்குகிறது.
  5. பெரும்பான்மையான அரசு இயக்குனர்கள்.
  6. சொந்த அலுவலர்கள்.
  7. நடைமுறை கட்டுப்பாடு இல்லை.
  8. நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கு பொறுப்பு.

அரசு நிறுமத்தின் நிறைகள் :

1. எளிமையான அமைப்பு.
2. அகத்தன்னாச்சி.
3. தனியார் பங்களிப்பு.
4. நெகிழ்வுத் தன்மை.
5. ஒழுங்கு.
6. தொழில் நிபுணத்துவம்.

www.Padasalai.Net
Downloaded From www.nagaicollege.com

7. பதில் அளிக்க இயலுகிறது.

அரசு நிறுமத்தின் குறைகள்:

1. மாறாத் தன்மையுடைய இயக்குனர் அவை.
2. பெயரில் மட்டும் சர்வாதிகாரம்.
3. நிறுமச் சட்டம் மற்றும் அரசியல் சட்டத்தில் மோசடி.
4. பயத்தின் வெளிப்பாடு.
5. நிபுணத்துவம் திறமை குறைவு.
6. சுயநல போக்கு.

<u>மாணவர்கள் செயல்பாடு:</u>

மாணவர்களை பாட புத்தகத்தை வாசிக்க செய்து ஏற்படும் சந்தேகங்களை வினவ செய்தல்.

<u>வலுவூட்டல் :</u>

பாடம் தொடர்புடைய படங்கள் மற்றும் வீடியோவை காண்பித்தல்.

<u>மதிப்பீடு:</u>

எளிய சிந்தனை வினா:

- பொதுத்துறை நிறுவனத்தின் மிகப் பழமையான அமைப்பு.......

நடுத்தர சிந்தனை வினா:

- அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது.....

உயர் சிந்தனை வினா:

- தாமதமும் சிகப்பு நாடா போக்கும் எந்தத் துறையின் குறைபாடக கருதப்படுகிறது.

<u>குறைதீர்க் கற்றல்:</u>

மெல்ல கற்கும் மாணவர்களுக்கு சிறு விளக்கங்கள் மூலம் புரியச் செய்து குறுமற்றும் சிறு வினா விடைகளைஎழுத வைத்தல்.

<u>செயல்பாடு:</u>

மாணவர்களை அரசு அமைப்புகளின் சின்னங்களை சேகரித்து Album தயாரிக்க செய்தல்.

<u>தொடர் பணி:</u>

மாணவர்களை பாடத்தில் உள்ள வினா விடைகளை படிக்க செய்து தேர்வுகளை நடத்துதல்.

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 10.

தேதி : ஜூலை - 5 வது வாரம்

NAME : S. Anusuya
SCHOOL : Govt.Hr.Sec.School, Melakottai,
Madurai dt.,
CELL : 99429 52873

Downloaded From www.nagaicollege.com

கற்றல் நோக்கம்:

- ❖ மைய வங்கியின் பொருளைப் புரிந்து கொள்ளுதல்
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின்தோற்றம் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின்செயல்பாடுகளை விவரித்து கூறமுடிதல்.

கற்றல் விளைவுகள்:

- ❖ உலகப் பொருளாதாரத்தின் மிகவும் ஆற்றல் வாய்ந்த துறையாக சேவைத் துறை உருவாகியுள்ளது என்பதை புரிந்துகொண்டனர்
- ❖ ஒரு நாட்டின் வர்த்தகம், வாணிகம் மற்றும் தொழில்களின் நரம்பு மண்டலமாக வங்கி கருதப்படுகிறது என்பதை தெரிந்துக்கொண்டனர்
- ❖ ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு மைய வங்கி உள்ளது. இது நாட்டின் அரசாங்கத்திற்குச் சொந்தமானது. ஒரு நாட்டின் அனைத்து வங்கிகளின்செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் இந்த உச்ச வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொண்டனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

PPT, Charts, QRcode etc.,

முன்னறிவு:

பண்டைய காலங்களில் வரிவசூல், அரசுக்கு செலுத்த வேண்டிய வருமானங்கள் போன்றவை அரசு கருவூலங்களில் செலுத்தப்பட்டு அதிலிருந்து நாட்டின் அனைத்து மக்களுக்கும் தேவையான உறுதி வாய்ப்புகள் அளிக்கபட்டது என்று முதல் பாடமான வாணிக வரலாற்றுப் பின்னணியை நினைவு கூர்ந்து அதிலிருந்து வாணிகத்தோடு தொடர்புடைய பிற துறைகள் வளர்ச்சியடைந்து இன்று முக்கிய துறையாக விளங்கும் சேவை தொழிலான வங்கிகளைப் பற்றி அறிமுகம் செய்வது.

பாடவளர்ச்சி:

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

ஆசிரியர் செயல்பாடு

இந்தியாவில் 3500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே (1500பொ.ஆ.மு)வங்கி நடவடிக்கைகள்தொடர்ந்துமேறகொள்ளப்பட்டு வந்துள்ளன என்பதை 1949ம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி "முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ கேட்ட உடன் காசோலை, வரைவோலை, பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ பொதுமக்களிடமிருந்து வைப்புதொகைகளைப் பெற்றுக்கொள்ளும்செயல் வங்கியியல் "எனப்படும் என்று வங்கி இலக்கணத்தை விளக்கி கூறி

- ❖ மைய வங்கி இலக்கணம்,தோற்றம், வங்கிகளின் வகைகள்,கட்டமைப்பு, பணிகள் பற்றி விளக்குதல்

மாணவர்களை, மைய வங்கியின் தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள் பாரம்பரியப் பணிகள், மேம்பாட்டுப் பணிகளை பட்டியலிடச் செய்து விளக்குதல்

Downloaded From www.nagaicollege.com

தோற்றம், கட்டமைப்பு, பணிகளை flow chart வடிவில் அமைத்து கரும்பலகையில் எழுதி விளக்கிக்கூறுதல்

மாணவர் செயல்பாடு:

மாணவர்களை, மைய வங்கியின் தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள் பாரம்பரியப் பணிகள், மேம்பாட்டுப் பணிகளை பட்டியலிடச் செய்து விளக்குதல்

வலுவூட்டல்:-

தோற்றம், கட்டமைப்பு, பணிகளை flow chart வடிவில்அமைத்துகரும்பலகையில்எழுதி விளக்கிக்கூறுதல்

மதிப்பீடு:

எளிய சிந்தனை வினாக்கள் (LOT):

- இந்தியமையவங்கிஎன்பது………
- RBI,April 1,………ஆண்டு முதல்தன்பணிகளைத்தொடங்கியது.

நடுத்தர வினாக்கள் (MOT):

- சேவைதொழில்களில் உள்ள சேவைகள் யாவை?
- வங்கி சேவைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக

உயர் சிந்தனை வினாக்கள் (HOT):

இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விவரிக்க

குறைதீர் கற்றல்:

RBIயின் கட்டமைப்பு மற்றும் பணிகளை புரிந்துகொள்வதில் தடுமாற்றம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு பின்வரும் விளக்கம் தரப்படும். Power point presentionவழியாக மற்றும் தினசரி நடவடிக்கைகளில் வங்கியின் செயல்பாடு வாழ்க்கையோடு எவ்வாறுதொடர்புற்றிருக்கிறது என்பதை ஒரு சில எடுத்துக் காட்டுகள் கூறி விளக்கமளித்தல்.

செயல்பாடு:

பணமதிப்பிழப்பு மற்றும் பண மதிப்பிழப்பு ஈடுசெய்தல் பற்றிய ஒரு விவாதம் வகுப்பறையில் நடத்துதல்

தொடர்பணி:

இந்திய ரிசர்வ் வங்கி இணைய தளத்தினை www.rbi.org.in ஐ பார்வையிட்டு ஏதாவது ஒரு வருடாந்திர அறிக்கையினைப் பற்றி மற்றும் பிற அறிக்கை பற்றிய ஆய்வறிக்கையை தயாரித்து வரச் செய்தல்

www.Padasalai.Net

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு: 10. வங்கிகளின் வகைகள்
தேதி : ஆகஸ்ட் 1 வது வாரம்

NAME : S. ANUSUYA
SCHOOL : GOVT.HR.SEC.SCHOOL, MELAKOTTAI, MADURAI DT.,
CELL : 99429 52873

கற்றல் நோக்கம்:

- பல்வேறு வகையான வங்கிகளைப் பற்றி புரிந்து கொள்ள முடியும்
- பல்வேறு வகையான நடவடிக்கைகளை விவரித்து கூறமுடியும்
- ஒரு வங்கியினை மற்றொரு வங்கியுடன் ஒப்பிட்டுக் கூற முடியும்

கற்றல் விளைவுகள்:

- பல்வேறு வகையான வங்கிகள், பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை வழங்கி வருகின்றன என்பதை தெரிந்து கொண்டனர்
- அனைத்து வகை வங்கிகளும் பணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டாலும் ஒவ்வொரு வகை வங்கிகளும் வெவ்வேறு துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்பதை புரிந்து கொண்டனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

PPT, charts, QRcode, flowcharts, etc.

முன்னறிவு:

முந்தைய பாடமான ரிசர்வ் வங்கி இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிட்டு வழிகாட்டுதல்களை வழங்கி வருவதையும் க்கும் பிதுற வங்கிகளுக்கும் இடையேயான வரவு, ஒரு வர்த்தக வங்கி அதன் வாடிக்கையாளர்களுடன் வைத்துள்ள வரவை போன்றது என்பதை தலைப்போடு நினைவுபடுத்துதல்

பாடவளர்ச்சி:

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

ஆசிரியர் செயல்பாடு

வங்கிகளின் வகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்

I. செயல்பாடுகளின் அடிப்படையில்

1.மையவங்கி

2.வணிகவங்கிகள்:-

வைப்புளை பெற்று, லாபம் சம்பாதிக்க கடன் வழங்குதல்

EX: SBI, கரூர் வைஸியா வங்கி

3.வளர்ச்சி வங்கிகள்:-

தொழில்களுக்கான நிதிகளை பெரிய அளவில் வழங்குவது

EX: IFCI, SIDBI, முத்ரா வங்கி

Downloaded From www.nagaicollege.com

4. கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்கள் அதன் உறுப்பினர்களுக்கு சொந்தமானது

EX:- NAFED, TNSHCB, MDCCB

5.வெளிநாட்டு வங்கிகள்

EX:Bank of America-America. பார்க்லேஸ் Bank-England

வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையும் இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கி

6.வட்டாரக் கிராமிய வங்கிகள்

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பங்களிப்பு வங்கி ஆகியோர் கூட்டாக இணைந்து இது அமைக்கப்படுகிறது

EX:பாண்டியன் கிராம வங்கி, திருமங்கலம், மதுரை, தமிழ்நாடு.

7.சிறப்பு வங்கிகள்

அரசாங்கத்தால் சிறப்பு நோக்கங்களுக்காக சில வங்கிகள் உருவாக்கப்படுகின்றன.

EX: EXIM வங்கி

NHB

8.உள்ளூர் பகுதி வங்கிகள்

நடுத்தர சிந்தனை வினாக்கள்

இடைநிலையர் என்பவர் யார்?

உயர் சிந்தனை வினாக்கள்

சில்லறை வியாபாரியின் பண்பு நலன்கள் யாவை?

செயல்பாடு

1. மாணவர்கள் அருகில் உள்ள மொத்த வியாபார நிலையத்துக்குச் சென்று அங்கு நடைபெறும் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்தல்.

2. மாணவர்கள் அருகில் இரு சக்கர வாகன விற்பனை நிலையத்திற்குச் சென்று அங்கு என்ன வகையான வழங்கல் வழி பின்பற்றப்படுகிறது எனத் தெரிந்து கொள்ளச்செய்தல்

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 24 சில்லரை வியாபாரம் செய்தல்

தேதி : அக்டோபர் 4 வது வாரம்

NAME : R.Narendhira Kumar
P.A.Vidya Bhavan Hr. sec. School, Karur.
CELL : 97153 83953

கற்றல் நோக்கம் :

இந்த அத்தியாயத்தைக் கற்றபின் மாணவர்கள்

1. சில்லறை வியாபாரம் செய்தலின் பொருள் புரிந்துகொள்ள முடியும்

2. சில்லறை வியாபார அமைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்

3. தொழில் வர்த்தகச் சங்கங்களின் பங்கினை அறிய முடியும்

கற்றல் விளைவுகள் :

மாணவர்கள் பிற்காலத்தில்,

1.குறைந்த மூலதனத்தைக் கொண்டு அளவான பொருட்களை இருப்பாகக் கொண்டு குறிப்பிட்ட ஓர் இடத்தில் நிலையாக வியாபாரம் செய்பவர்கள் நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகளாகவும்

2.அதிக மூலதனத்துடன் பேரளவு பொருட்களை இருப்பாகக் கொண்டு குறிப்பிட்ட ஒரு இடத்தில் பேரளவில் சில்லறை வியாபாரம் செய்யும் நிறுவனங்கள் நிலையிட பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள் என செயல்படலாம்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்

Downloaded From www.nagaicollege.com

Chart, PPT, Videos, QR codes, Online tests through Games..,

முன்னறிவு:

முற்காலத்தில் 'பண்டமாற்று முறையில்' பொருட்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது.

பணம் என்ற ஒன்று கண்டு பிடிக்கப்பட்டபின் அனைத்துப் பொருள்களும் பணமதிப்பின் அடிப்படையில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.

பணப்பரிமாற்றத்தினால்விற்பனை நடவடிக்கைள் எளிதாகிறது.

இலாபம் ஈட்டும் நோக்கில் பொருட்களையும் சேவைகளையும் வாங்கி விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது வியாபாரம்.

பொருட்களின் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கிடையில் வியாபாரம் இடையீட்டாளராகச் செயல்படுகிறது.

சந்தை நடவடிக்கைகளான பொருட்களையும் சேவைகளையும் வாங்குவதும் விற்பதும் ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெற்றால் அது உள்நாட்டு வியாபாரம் எனப்படும்.

உள்நாட்டு வியாபாரம் இரு பிரிவுகளை உள்ளடக்கியது. 1. மொத்த வியாபாரம் 2. சில்லறை வியாபாரம்.

<u>கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் :</u>

ஆசிரியர் செயல்பாடு :

பாடம் அறிமுகம்:

நுகர்வோருக்கு நேரடியாக பொருள்களையும் சேவைகளையும் சிறிய அளவில் விற்பனை செய்யும் நடைமுறை சில்லறை வியாபாரம் செய்தல் (Retailing) ஆகும்.

செய்யும் தொழிலின் அளவு, விற்கும் பொருள்களின் தன்மை, விலை மற்றும் சேவை மற்றும் தொழில் அமைப்பின் உரிமை ஆகியவற்றின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.



மாணவர் செயல்பாடு :

மாணவர்களை பாடப் புத்தகத்தை படிக்க சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடு இடச் செய்தல் கலைச் சொற்களை படிக்க சொல்லுதல்.

வலுவூட்டல்

Downloaded From www.nagaicollege.com

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை VIDEOS, GAMES, QR CODE SCAN செய்து விளக்கி கூறுதல்.

மதிப்பீடு செய்தல்

எளிய சிந்தனை வினாக்கள்:

சில்லறை வியாபாரிகள் _______________ அளவில் பொருட்களை வைத்திருப்பர்.

நடுத்தர சிந்தனை வினாக்கள்

தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?

உயர் சிந்தனை வினாக்கள்

சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரி.

செயல்பாடு

1.மக்கள் வாழ்விடங்களுக்கு அருகில் பல பொருட்கள் கிடைக்கின்றன.
தயாரிப்பாளர்களிடமிருந்து அவை எவ்வாறு கடைகளுக்கு, எப்படி வந்து சேர்ந்தன என்று அறிவாயா?

2. உங்கள் ஊரில் உள்ள நிலையிடசில்லறை வியாபாரிகளை நீங்கள் வகைப்படுத்துக.

3. உங்கள் பகுதியில் இரண்டாம் தர பொருட்கள் விற்பனையாளர் இருக்கிறார்களா? அவர் விற்கும் பொருள்கள் எவை? பட்டியலிட்டு எழுதுக.

4. ஒரே வகைப் பொருள்கள் விற்பனை செய்யும் இரண்டு சில்லறைப் பண்டக சாலைகளின் சிறப்பியல்புகளை வேறுபடுத்திக் காட்டுக

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 25

தேதி : அக்டோபர் 5 வது வாரம்

NAME : N. மைத்ரா
நகராட்சி மேல் நிலைப்பள்ளி, லட்சுமிபுரம்,
கொளத்துர், சென்னை-99
CELL : 9940519850

கற்றல் நோக்கம்:

- பன்னாட்டு வணிகம்-பொருள் அறிதல்
- பன்னாட்டு வணிகம் உள்நாட்டு வணிகத்துடன் எவ்வாறு வேறுபடுகிறது என அறிதல்.
- பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள், தீமைகள் பற்றி அறிதல்
- பன்னாட்டு வணிகத்தின் வகைகளை அறிதல்.

கற்றல் விளைவுகள்:

- பண்டைய தமிழ்நாட்டில் பன்னாட்டு வணிகம் எவ்வாறு சிறப்புடன் திகழ்கிறது என புரிந்துகொண்டனர்
- நம் நாட்டில் இருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்கள், இறக்குமதி செய்யும் பொருட்கள் பற்றி புரிந்து கொண்டனர்

Downloaded From www.nagaicollege.com

- உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வணிகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொண்டனர்
- பன்னாட்டு வணிக வகைகளைப் புரிந்து கொண்டனர்
- பன்னாட்டு வணிகத்தின் நன்மை, தீமைகளை விவாதித்க புரிந்து கொண்டனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

PPT, Videos, Educational games, Magazines, QR code, Online Test.

முன்னறிவு:

- பண்டைய தமிழ் நாட்டில் சேர,சோழ, பாண்டிய அரசர்கள் ரோம், சீனா, ஐரோப்பாபோன்ற நாடுகளுடன் கடல் கடந்து வணிகம் செய்ததை நினைவு படுத்துதல்
- சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் வட இந்திய மௌரியர் காலத்தில்வெளிநாட்டுபொருடகளுக்கு 10% லாப வரம்பு நிர்ணயம்செய்யப்பட்டதை நினைவு கூறுதல்
- காபுல்,அரேபியா, ஐரோப்பா,மேற்கு ஆசியா சீனா போன்ற நாடுகளில் இருந்து குதிரைகள், உலர் பழங்கள், விலை உயர்ந்த கற்கள், ஜவுளி,பட்டு போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப் பட்டதை நினைவு படுத்துதல்.
- பாடஅறிமுகம்:
- நம் நாடு பிற நாடுகளுடன் கொண்டுள்ள வர்த்தக தொடர்பினை விளக்கி அறிமுகம் செய்வது.
- உலக அளவில் பன்னாட்டு வணிகத்தில் முன்னிலையில் உள்ள அமெரிக்கா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் MNC-பற்றி அறிமுகம் செய்தல்.
- Largest Exporter-சீனா என்பதனை அறிமுகம் செய்தல்.
- வளைகுடா நாடுகளில் இருந்து பெட்ரோலிய பொருட்களை நாம் இறக்குமதி செய்வதை அறிமுகம் செய்தல்

பாட வளர்ச்சி

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

ஆசிரியர் செயல்பாடு:

- பன்னாட்டு வணிகம்-கருத்து-பொருள்-வரை விலக்கணம்.
- பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடும் வழிமுறைகள்

1. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி
2. ஒப்பந்த உற்பத்தி
3. உரிமம் மற்றும் உரிமையாளர்
4. இணைவினை
5. அயல் நாட்டு நேரடி முதலீடு

பன்னாட்டு வணிகத்தின் முக்கியத்துவம் மற்றும் சிறப்புக் கூறுகள்

Downloaded From www.nagaicollege.com

முக்கியத்துவம்:- வளங்களின் சமமற்ற பகிர்வு, உற்பத்தி காரணிகளின் சீரற்ற கிடைப்பு தன்மை, சிறப்பு தேர்ச்சி, அடக்க விலை குறைவு

சிறப்பு கூறுகள்:-நாடுகளின் பங்கேற்பு அன்னிய செலாவணி பயன்படுத்துதல், சட்டபுர்வ கடமைகள்,அதிகப்படியான ஆவணங்கள் தயாரித்தல் வேறுபடும் பொருளாதார சூழல்.

உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

பன்னாட்டு வணிகத்தின் வகைகள்

- ✓ ஏற்றுமதி வியாபாரம்
- ✓ இறக்குமதி வியாபாரம்
- ✓ மறு ஏற்றுமதி வியாபாரம்

பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள்

புவியியல் நிபுணத்துவம்

இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்

பொருளாதார வளர்ச்சி

வேலை வாய்ப்பை உருவாக்குதல்

வாழ்க்கை தரம் மேம்படுதல்

அதிகலாபத்திற்கான வாய்ப்பு, பன்னாட்டு அனுமதி

தீமைகள்:-

பொருளாதார சார்பு

உள்நாட்டு தொழில் வளர்ச்சி பாதிப்பு

ஆபத்து விளைவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்தல், அரசியல் சுரண்டல் கலாச்சார சீரழிவு, நாடுகளுக்கிடையே போட்டி, இயற்கை வளங்களைத் தவறாக பயன்படுத்துதல்

மாணவர் செயல்பாடு:

மாணவர்களைப் பாட புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகள், கலைச் சொற்களை அறிந்து கொள்ளச் செய்தல்

வலுவூட்டல்:-

புதிய கடினமான கருத்துக்களை Vdeos,QR code scanசெய்து விளக்குதல்.

பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடுவதற்கான வழிமுறைகள், பன்னாட்டு வணிகத்தின் சிறப்பியல்புகள், வகைகள்.

மதிப்பீடு

எளிய சிந்தனை வினாக்கள் (LOT):

- பன்னாட்டு வணிகம் என்றால் என்ன?
- ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?

நடுத்தர சிந்தனை வினா (MOT):

www.Padasalai.Net
Downloaded From www.nagaicollege.com

- நாடுகளுக்கிடையே சரக்கு மற்றும் சேவைகளை மட்டும் பரிமாறிக் கொண்டால் அது...... எனப்படும்.
- மறு ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?

உயர்சிந்தனை வினாக்கள் (HOT):

- பன்னாட்டு வணிகத்தின் சிறப்புகள் யாவை?
- மறு ஏற்றுமதியின் சிறப்புக் கூறுகள் யாவை?

குறைதீர் கற்றல்:

பாடக் கருத்துகளை புரிந்து கொள்வது கடினமாக உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு பின்பரும் விளக்கம் அளிக்கப்படும்.

செயல்பாடு:

- நம் நாடு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் பொருட்களைப் பற்றி கூறுதல்.
- உள்நாட்டு /பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை, மாணவர்களை குழுக்களாகப் பிரிந்து உரையாடச் செய்வது.

தொடர்பணி:

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றி செய்தித் தாள்களில் வரும் கருத்துக்களை சேகரித்து வகுப்பில் படித்துக் காண்பிக்கச் செய்தல்

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு: 26 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள்
தேதி : நவம்பர் 1 வது வாரம்

NAME : V. JANAKI
MPL GHSS Pettai Tirunelveli
CELL : 74023 58561

கற்றல் நோக்கங்கள்:

ஏற்றுமதி வணிகத்தின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை விளக்க முடியும்.
ஏற்றுமதி வணிக நடைமுறைகளை இடைநிலையர்களின்பங்கை எடுத்துரைக்க முடியும்.
இறக்குமதி வணிக நடைமுறைகளை,இடைநிலையர்களின் பங்கை குறித்து விளக்க இயலும்.

கற்றல் விளைவுகள்:

தான் வாங்க கூடிய பொருட்கள் ஏற்றுமதியான பொருளா? இறக்குமதியான பொருளா?என்றும் அதன் நடைமுறைகள் எவ்வாறு இருந்திருக்கும் என்றும் அறிந்து கொள்கிறான்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

செய்தித்தாள் விளம்பரங்கள், PPT, VIDEO, QR CODE, ONLINE TEST

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

முன்னறிவு:

ஏற்றுமதி இறக்குமதி பற்றி பொருள் கூற செய்தல்.

பாட அறிமுகம்:

உனக்கு கிடைக்கும் பொருள் யார் யார்மூலமாக வந்து சேருகிறது எனக் கூறி அறிமுகம் செய்தல்.

வாங்குபவர் – இறக்குமதியாளர்

விற்பவர் – ஏற்றுமதியாளர்

பாட வளர்ச்சி:

ஏற்றுமதி நடைமுறை - இந்தியாவில்பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கான நிறுவனங்கள்.

பணிகள் - பன்னாட்டு வணிகத்தில் வணிக வங்கியின் பங்கு, ஏற்றுமதியின் நோக்கம், நடைமுறை, ஏற்றுமதி ஆவணங்கள். கப்பல் இரசீது – கப்பல் வாடகை முறிகள் வேறுபாடுகள், ஏற்றுமதி வணிகத்தில் இடைநிலையர்களின் பணிகள், இறக்குமதி நடைமுறை, இறக்குமதியில் பயன்படுத்தும் ஆவணங்கள், இறக்குமதியில் இடைநிலையர்கள் பங்கு.

அகற்றீட்டு முகவர்:

துறைமுகத்திலிருந்து சரக்கை வெளிக்கொணர்வது , இறக்குமதியாளர் சார்பாக கப்பல் கட்டணம், துறைமுக கட்டணம், சுங்கவரி செலுத்தி சரக்கை லாரியிலோ, ரயிலோ அனுப்பி தனக்குரிய கழிவை குறிப்பிட்டு அனுப்புகிறார்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

ஏற்றுமதி இறக்குமதி வணிக நடைமுறை மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது என்பதை மாணவர்களுக்கு விளக்கி கூறுதல்.

ஆசிரியர் செயல்பாடு:

கலைசொற்களை வரைபடம்மூலம்மாணவர்களுக்கு உரையாடி புரியவைத்தல்.

மாணவர் செயல்பாடு:

மாணவர்களை பாடப்புத்தகத்தைபடிக்கச்சொல்லி புதியவார்த்தைகளை அடிக்கோடிடச் செய்தல். கலைச்சொற்களை படிக்கச் சொல்லுதல்.

வலுவூட்டல் :

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை விளக்குதல், நாணய உறுதி கடிதம், கப்பல் தலைவர் இரசீது, QR CODE ஸ்கேன் செய்து விளக்கி கூறுதல்.

மதிப்பீடு:

எளிய சிந்தனை வினாக்கள்:

Downloaded From www.nagaicollege.com

EPC - ஏற்றுமதி வளர்ச்சி குழு கப்பல் தலைவர் சரக்கு பெற்று கொண்டதற்காக ஆதாரமாக வழங்கும் இரசீது – கப்பல் இரசீது

நடுத்தர சிந்தனை வினாக்கள்:

சரக்காணையின் உள்ளடக்கம் கப்பல் தலைவர் இரசீது

உயர் சிந்தனை வினாக்கள்:

இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள்

குறைதீர் கற்றல்:

- கருத்துக்களை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு பின்வரும் விளக்கம் தரப்படும்.
- ஏற்றுமதி ஆவணங்கள் சரக்கை வாங்க இறக்குமதியாளர் ஏற்றுமதியாளருக்கு அனுப்பும் ஆவணம் சரக்காணை

செயல்பாடு:

ஏற்றுமதி - இறக்குமதி வணிக நடைமுறை, கப்பல் இரசீது - கப்பல் வாடகை முறி மாணவர்களை இரு அணிகளாக பிரிந்து உரையாட செய்வது

தொடர்பணி:

செய்தித்தாள், நாணயம் விகடன்பத்திரிகையில் வரும் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் பற்றிய செய்திகளை வாசித்து காட்டுதல்.

வகுப்பு: 11 NAME : P.MANJULA

பாடம் : வணிகவியல் காமராசர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி பேட்டை

தலைப்பு: 27 .பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் திருநெல்வேலி (மா)

தேதி : நவம்பர் 2 வது வாரம் CELL : 89035 92497

கற்றல் நோக்கம் :

- உலக வர்த்தக அமைப்பின் பொருள், நோக்கம், பணிகள் பற்றி மாணவர்கள் அறிய
- உலக வங்கியின் முக்கியத்துவம், பணிகள் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ள
- பன்னாட்டு நிதியியத்தின் முக்கியத்துவம், பணிகள் பற்றி புரிந்து கொள்ள
- தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு பற்றி தெரிந்து கொள்ள

கற்றல் விளைவுகள்:

- உலக வர்த்தக அமைப்பின் பொருள், நோக்கம், பணிகள் நன்மைகள் பற்றி மாணவர்கள் தெளிவாக தெரிந்து கொண்டனர்

Downloaded From www.nagaicollege.com

- உலக வங்கி பற்றியும், பன்னாட்டு நிதியியம் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொண்டனர்
- தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு பற்றி முழுமையாக புரிந்து கொண்டனர்

கற்பித்தல் உபகரணங்கள்:

PPT, Videos, Newspaper, QR code, Magazines

முன்னறிவு:

ஏற்கனவே அத்தியாயம் 25-ல் படித்த பன்னாட்டு வணிகத்திலிருந்து ஒரு சில கேள்விகளைக் கேட்டு பாடத்தலைப்போடு நினைவு படுத்துதல்.

பாட அறிமுகம்:

பன்னாட்டு வணிகம் சீராக நடைபெறவும், ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் ஒரு தனிப்பட்ட அமைப்பு தேவை என்பதை மாணவர்களிடத்தில் கூறி பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் பாடத்தை அறிமுகம் செய்தல்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

உலக வர்த்தக அமைப்பு பொருள், நோக்கங்கள், நன்மைகள்.

உலக வங்கியின் நோக்கங்கள், பணிகள்.

பன்னாட்டு நாணய நிதியம், நோக்கங்கள், பணிகள்.

தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு, நோக்கங்கள் பணிகள்.

மாணவர் செயல்பாடு:

உலக வங்கியுடன் இணைந்த கூட்டு நிறுவனங்களைப் பற்றி கலந்துரையாடச் செய்தல்.

சார்க் கூட்டமைப்பில் உள்ள உறுப்பு நாடுகள் பற்றி விவாதித்தல்.

வலுவூட்டல்:

கடினமான பகுதிகளை பல்வேறு வீடியோக்களை போட்டுக் காட்டி விளக்கிக் கூறுதல்.

மதிப்பீடு:

எளிய சிந்தனை வினாக்கள்:

1. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள் _______

Downloaded From www.nagaicollege.com

2. WTO தலைமையகம் அமைந்துள்ள இடம் ______

3. உலக வங்கி அமைந்திருப்பது _______

நடுத்தர சிந்தனை வினாக்கள்:

1. உலக வங்கி என்பதன் பொருள் யாது?

2. சிறப்பு எடுப்பு உரிமைகள் என்றால் என்ன?

உயர் சிந்தனை வினாக்கள்:

1. சார்க் அமைப்பின் பணிகள் யாவை?

2. உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை?

குறைதீர் கற்றல்:

பாடத்தை புரிந்து கொள்ளாத மாணவர்களை அடையாளம் கண்டு அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் மிக எளிமையான முறையில் பல்வேறு எடுத்துக்காட்டுக்களை எடுத்துக்கூறி புரிய வைத்தல்

தொடர்பணி:

பன்னாட்டு வணிகத்தில் IMF, IBRD, IFC-யின் பங்கு பற்றிய விவரங்களை சேகரித்து வரச் சொல்லுதல்.

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 28 செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை

தேதி : நவம்பர் 3 வது வாரம்

NAME : R Chellapandi
NADAR SARASWATHI HSS Usilampatti
CELL : 99446 66978

கற்றல் நோக்கம்:-

- செலுத்தல் சமநிலையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம் மற்றும் கட்டமைப்பு
- வாணிப சமநிலையின் பொருள், வரைவிலக்கணம் மற்றும் கட்டமைப்பு

கற்றல் விளைவுகள்:-

இந்த அத்தியாயம் கற்ற பின்பு மாணவர்கள் வாணிப சமநிலை பொருள் மற்றும் இயல்புகள் செலுத்தல் சமநிலையின் பொருள் மற்றும் சிறப்பம்சங்கள் பற்றி விரிவாக புரிந்து கொள்வர்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்

QR CODE , PPT, VIDEOS, ONLINE TEST

Downloaded From www.nagaicollege.com

முன்னறிவு:-

வாணிபச்சமநிலை என்பது ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையே நிகரவிளைவு என்பதனையும்,

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

ஆசிரியர் செயல்பாடு:-

செலுத்தல் சமநிலை ஒரு காலப் பகுதியில் ஒரு காட்டின் குடியிருப்போர்களுக்கு மற்ற நாடுகளின் குடியிருப்போர்களுக்கும் இடையே ஏற்படும் ஒரு அறிக்கை என அறிக்கை

செலுத்தல் சமநிலையின் பொருள் மற்றும் நோக்கம், சிறப்பம்சங்கள் குறித்தும் தெளிவாக விளக்குதல். அதே போன்று வாணிப சமநிலையின் பொருள், வரைவிலக்கணம் உள்ளமைப்பு குறித்தும் எடுத்துக் காட்டுடன் விளக்குதல்

உள்ளடக்கம்

செலுத்தல் சமநிலை – வாணிபச் சமநிலை

1) பொருள்
2) நடவடிக்கைகளின் தன்மை
3) மூலதன நடவடிக்கைகளின் பதிவு
4) நடவடிக்கை உள்ளமைப்பு
5) நிகரவிளைவு இடம் பெற்றுள்ள வேறுபாடுகளை விளக்கிக் கூறுதல்

மாணவர் செயல்பாடு:

மாணவர்களை நன்கு படிக்கவைத்து முக்கிய வார்த்தைகளான செலுத்தல் சமநிலை, வாணிப சமநிலை, நடப்புக் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியனவற்றை அடிக்கோடிட செய்தல்.

வலுவூட்டல்:-

புதிய மற்றும் கடினமான வார்த்தைகளை CHART QR CODE பயன்படுத்தி விளக்குதல்.

மதிப்பீடு:

1) வாணிப சமநிலை என்றால் என்ன?
2) செலுத்தல் சமநிலை வரையறு.
3) மூலதனக் கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு: 29 ஒப்பந்தத்தின் கூறுகள்
தேதி : நவம்பர் 4 வது வாரம்

NAME : N. மைத்ரா
நகராட்சி மேல் நிலைப்பள்ளி லட்சுமிபுரம்,
கொளத்தூர் சென்னை-99
CELL : 9445716033

Downloaded From www.nagaicollege.com

கற்றல் நோக்கம்:

- ஒப்பந்த சட்டத்தின் பொருள் மற்றும் இலக்கணம் புரிந்து கொள்ள இயலும்
- ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகளை அறிந்து கொள்ள இயலும்
- ஒப்பந்தங்களின் வகைகளை அறிந்து கொள்ள இயலும்

கற்றல் விளைவுகள்:

- இந்த பாடம் கற்ற பின் சட்டப்படி செல்லக் கூடிய ஒப்பந்தத்தில் இன்றியமையாத கூறுகளை அடையாளம் காண முடியும்
- முனைவு மற்றும் ஏற்பின் பொருள் புரிந்து கொள்ள முடியும்
- மறுபயன், திரும்ப செலுத்துவதற்கான தேவையும் புரிந்து கொள்ள முடியும்
- ஒப்பந்தத்தில் ஈடுபட தேவையான தகுதிகள், தகுதியின்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்
- போல்வு ஒப்பந்தங்கள் பொருளை அறிந்து பின்னர் அதனை மற்ற ஒப்பந்தங்களில் இருந்து வேறுபடுத்தலாம்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

Chart, QR code, PPT, Videos, Online test

முன்னறிவு:

சட்டம் பற்றி அனைவரும் தெரிந்து இருக்க வேண்டும். ஒருவருக்கு சட்டத்தை பற்றி எதுவும் தெரியவில்லை என்பதால் அவருக்கு சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்க முடியாது

நமது அரசியல் அமைப்பு சட்டம், உரிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம், வரி சட்டம், தொழிலாளர் சட்டம், வணிக சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு சட்டத்திற்கும் தனித்தனியே ஒரு துறை செயல்படுகிறது.

நமது வாழ்வில் சரியான நடத்தைக்கும் சமுதாயத்தின் முறையான ஒழுங்கு முறைக்கும் ஏற்படுத்தப்பட்ட விதியே சட்டம் எனப்படும், சமுதாயத்தில் அமைதி, ஒற்றுமை, நீதி, சமூகப் பாதுகாப்பு ஒழுங்கு ஆகியன சட்டத்தின் உதவியால் ஏற்படுத்த முடியும்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்:

பாட அறிமுகம்:

ஒப்பந்த சட்டம் என்பது வணிக சட்டத்தின் ஒரு கிளை. ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் தெரிந்து கொள்ளவும், பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய தீர்வுகளையும் காண ஒப்பந்த சட்டம் உதவுகிறது

இப்பாடத்தில் நாம் இந்திய ஒப்பந்த சட்டம் பரிவுகள், சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள், ஒப்பந்தம்-உடன்படிக்கை ஆகியவற்றை தெரிந்து கொள்வோம்.

<u>இந்திய ஒப்பந்த சட்டம் 1872</u>

இச்சட்டம் 1872 செப்டம்பர் 1 ஆம் தேதி ஜம்மு காஷ்மீர் நீங்கலாக இந்தியா முழுவதும் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் வணிக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த, அனைத்து விதிகளையும் வகுத்துள்ளது.

Downloaded From www.nagaicollege.com

பாட வளர்ச்சி

ஆசிரியர் செயல்பாடு:

<u>இந்திய ஒப்பந்த சட்டம்-பிரிவுகள்</u>

(அ) பொது ஒப்பந்தங்கள் (ஆ) சிறப்பு ஒப்பந்தங்கள்

<u>ஒப்பந்தம் :</u> ஒப்பந்தம் என்பது ஒரு நபர் செய்த முனைவை மற்றொரு நபர் ஏற்கும் போது உருவாகிறது.

ஒப்பந்தம்= உடன்படிக்கை + சட்டம் மூலம் நடைமுறைப்படுத்துவது.

உடன்படிக்கை= முனைவு + ஏற்பு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டு, சட்டத்தால் நடைமுறை படுத்தப்பட்ட உடன்படிக்கையே ஒப்பந்தம் ஆகும்.

<u>வரைவிலக்கணம்</u>

1. முனைவு பிரிவு 2(a)

   "ஒருவர் ஏதேனும்.......முன்மொழிந்ததாகக் கூறலாம்"

2. ஏற்பு பிரிவு 2(b)

   "முன் மொழிதல் யாருக்கு......கூறப்படுகிறது"

3. உடன்படிக்கை 2(c)

   "ஒரு நபர்........உடன்படிக்கையாகும்"

4. மறுபயன்:-

   போலக்- ஒருவரின்------கூடியதாகும்.

5. வாக்குறுதி : பிரிவு 2(d)

   "வாக்குறுதி அளிப்பவரின்-----அழைக்கப்படும்"

6. ஒப்பந்தம் 2(h)

   "சட்டத்தால் நடைமுறைப் படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை"

<u>சட்டப்படி செல்லக் கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள்</u>

- முனைவும் ஏற்பும்
- சட்ட பூர்வமான மறுபயன்
- தன்னிச்சையான இசைவு
- தெளிவுடைமை
- சட்டத்தால் செயல்படுத்தும் திறன்
- சட்ட உறவுமுறை
- சட்டபூர்வமான நோக்கம்
- ஒப்பந்த தகுதி
- நிறைவேற்றும் தன்மை
- தேவையான சட்ட சடங்குகள்

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஒப்பந்தத்திற்கும் உடன்படிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

அடிப்படை	ஒப்பந்தம்	உடன்படிக்கை
வரைவிலக்கணம்	சட்டத்தால் நடைமுறைப் படுத்தப்படும் ஒரு உடன்படிக்கை	மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதி மொழிகளின் ஒவ்வொரு தொகுதியும்.
செயலாக்க தன்மை	அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும்	அனைத்து உறுதமொழிகளும் செயல்படுத்த முடியாது
பரஸ்பர உறவு	ஒப்பந்தம் என்பது உடன்படிக்கையை உள்ளடக்கியது	உடன்படிக்கையில் எல்லா ஒப்பந்தங்களும் உள்ளடங்கவில்லை
செல்லக் கூடியது	சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம்	சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும்
சட்டபூர்வ கடமை	அனைத்து ஒப்பந்தங்களுக்கும் சட்டபூர்வமான கடமை உள்ளன	சட்டபூர்வமான கடமை அனைத்து உடன்படிக்கையிலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை

ஒப்பந்தங்களின் வகைகள்



சட்டப்படி செல்லக் கூடிய தன்மை	உருவாக்க அடிப்படையில்	நிறைவேற்ற அடிப்படையில்
1. செல்தகு ஒப்பந்தம்	1. வெளிப்படை ஒப்பந்தம்	1.நிறைவேறிய ஒப்பந்தம்
2. செல்லாத ஒப்பந்தம்	2. உட்கிடை ஒப்பந்தம்	2. நிறைவேற்ற ஒப்பந்தம்
3. தவிர்தகு ஒப்பந்தம்	3. போல்வு ஒப்பந்தம்	3. ஒருதலை ஒப்பந்தம்

Downloaded From www.nagaicollege.com

4. சட்டத்துக்கு முரணான ஒப்பந்தம்	4. மறைமுக ஒப்பந்தம்	4. இருதலை ஒப்பந்தம்

மாணவர் செயல்பாடு:

மாணவர்களை பாடத்தினை படிக்க வைத்து முக்கிய வார்த்தைகளை அடிக்கோடிட செய்தல்

வலுவூட்டல்:-

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை chart, QR code பயன்படுத்தி விளக்குதல்

மதிப்பீடு :

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

- சட்டத்தால் நடைமுறைப் படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை---------
- இளவருடன் செய்யும் ஒப்பந்தம்--------

நடுத்தர சிந்தனை வினா(MOT):

- முனைவு என்றால் என்ன?
- உடன்படிக்கை என்றால் என்ன?

உயர்சிந்தனை வினாக்கள்(HOT):

- சட்டப்படி செல்லக்கூடிக ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் யாவை?

நிறைவேற்றுதல் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள் யாவை?

தொடர் பணி

மாணவர்களை மேற்படிப்பிற்காக வங்கியில் கடன் பெற மேற்கொள்ளும் ஒப்பந்தம் குறித்து அறிக்கை எழுதி வர கூறுதல்

வகுப்பு: 11

பாடம் : **வணிகவியல்**

தலைப்பு: 30. ஒப்பந்த நிறைவேற்றம்

தேதி : **நவம்பர்4 வது வாரம்**

NAME : வீ. நடராஜன்

அரசு மேல்நிலைப் பள்ளி, **பழையனூர்**

சிவகங்கை மாவட்டம்.

CELL : 96552 39087

கற்றல் நோக்கம்:-

- ஒப்பந்த நிறைவேற்றத்தின் பொருள் மற்றும் அதன் இன்றியமையாத கூறுகளைப் பற்றி அறிந்து கொள்ள இயலும்.
- நிறைவேற்றத்தின் நேரமும் மற்றும் இடமும் பற்றிய விதிகளைத் தெரிந்து கொள்ள இயலும்.
- கூட்டு உரிமைகள் மற்றும் கூட்டுப் பொறுப்புகளின் ஒப்படைப்பு பற்றி புரிந்து கொள்ள முடியும்.

Downloaded From www.nagaicollege.com

கற்றல் விளைவுகள்:-

- ஒப்பந்தங்களின் நிறைவேற்றம்- ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நபரும் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்களாக உள்ளனர் என்பதை புரிந்து கொண்டனர்.
- வீடுகட்டும்போதுவீட்டுக்காரருக்கும்,பொறியாளருக்கும் உள்ள ஒப்பந்தம் என்ன என்பதை மாணவர்கள் தெரிந்து கொண்டனர்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :-

Ppt, Video, News paper cutting related prospectus, Chart related to the lesson, Hi-tech lab, Online test link.

முன்னறிவு:-

- இந்திய ஒப்பந்தச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
  -1872
- சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை என்ன?
  -ஒப்பந்தமாகும்
- உடன்படிக்கை 2(e)Agreement என்றால் என்ன?

-ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும் உடன்படிக்கையாகும்.

ஒப்பந்தம்= முனைவு + ஏற்பு

பாட அறிமுகம்:-

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

ஆசிரியர் செயல்பாடு:-

ஒப்பந்த நிறைவேற்றம் ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தமது கடமைகளை நிறைவேற்றிவிட்டால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.

இரண்டு வழிகள்:-

1. உண்மையான நிறைவேற்றம்:-
   - ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் தங்கள் கடமைகளைச் செய்தல் அது உண்மையான நிறைவேற்றமாகும்.
   - இதில் ஒப்பந்தப்படி நபர்கள் அவர்கள் அறிந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.
2. நிறைவேற்றுவததற்கான முனைவு
   - வாக்குறுதி அளித்தவர் ஒப்பந்தத்தின் கீழ் தான் ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்ற முன்வந்தும் அதை வாக்குறுதி பெற்றவர் ஏற்க மறுக்கிறார்.
   - இது உண்மையான நிறைவேற்றம் கிடையாது ஆனால் நிறைவேற்றத்திற்கு சமமாகக் கருதப்படும்.

Downloaded From www.nagaicollege.com

- யார் நிறைவேற்ற கோரிக்கையை விடுக்கலாம்?

1. வாக்குறுதி பெறுபவர்(Promise)

   வாக்குறுதி பெறுபவர் மட்டுமே ஒப்பந்த நிறைவேற்றத்தைத் கோர உரிமையுள்ள நபர்.

2. சட்டரீதியான பிரதிநிதி(Legal representative)

   சில சூழ்நிலைகளில் சட்டரீதியான பிரதிநிதி நிறைவேற்றத்தைக் கோரலாம்.

3. மூன்றாவது நபர்(Third person)

   விதிவிலக்காக சில சூழ்நிலைகளில் அயலார் கூட நிறைவேற்றத்தைக் கோரும் உரிமை பெறுகிறார்.

ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?

1. வாக்குறுதி அளித்தவரால் (பதிவு 40):-

   -தனிப்பட்ட ஆற்றல் சார்ந்த ஒப்பந்தங்களில் அவை வாக்குறுதி அளித்தவராலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

எ.கா- Xஎன்பவர் ஓவியம் ஒன்றை வரைந்து தருவதாக Y என்பவருக்கு வாக்குறுதி அளிக்கிறார். X என்பவர் இவ்வாக்குறுதியை தானே நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் இதில் X என்பவரின் தனிப்பட்ட ஆற்றல் அடங்கியுள்ளது.

2. முகவர் (பிரிவு 40):-

-வாக்குறுதி அளித்தவரின் தனிப்பட்ட ஆற்றலை நம்பி ஒப்பந்தம் உருவாக்கப்படவில்லையெனில் அத்தகைய ஒப்பந்தத்தில் வாக்குறுதி அளித்தவரின் முகவரும் நிறைவேற்றலாம்.

3. சட்டரீதியான பிரதிநிதி:-

-வாக்குறுதி அளித்தவர் இறந்து விட்டால் அந்த ஒப்பந்தம் முடிவடைகிறது ஆயினும் தனிப்பட்ட ஆற்றலை நம்பிக்கையில்லாத ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை வாக்குறுதி அளித்தவரின் சட்டரீதியான வாரிசுதாரர் அவரது மறைவிற்கு பிறகு நிறைவேற்றலாம்.

4. மூன்றாவது நபர்

-வாக்குறுதி பெறுபவர் மூன்றாம் தரப்பினர் ஒப்பந்தம் நிறைவேற்றுவதை ஒப்புக்கொண்டால் வாக்குறுதி அளித்தவரே அதனை நிறைவேற்ற வேண்டும் என வற்புறுத்த இயலாது.

5. கூட்டு வாக்குறுதிகள்

6. வாக்குறுதி நிறைவேற்றத்தின் நேரமும் மற்றும் இடமும்

எ.கா- A என்பவர் C என்பவருக்கு ரூ.10,000 தருவதாக B என்பவரிடம் வாக்குறுதி அளிக்கிறார். ஆனால் A என்பவர் Cக்கு அத்தொகையை அளிக்க தவறி விட்டார். இங்கு அத்தொகையை அளிக்குமாறு கோர வேண்டியவர் Bயே அன்றி C அல்ல.

இருதரப்பு வாக்குறுதிகள்(பிரிவு 2 (F))

-ஒரு நபர் தனது வாக்குறுதியை மற்றவரின் வாக்குறுதிக்கு மறுபயனாக அளிக்கும் பொழுது அவ்விரு வாக்குறுதிகளும் இருதரப்பு வாக்குறுதிகள் என அழைக்கப்படுகினறன.

எ.கா:-X என்பவர் தனது வீட்டை ரூ. 5,00,000க்கு Y என்பவருக்கு விற்பனை செய்வதாக வாக்களிக்கிறார்.

இதில் வாக்குறுதிகள் இருதரப்புமாக உள்ளன.

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள்:-

1. இருதரப்பு மற்றும் தன்னிச்சையான வாக்குறுதி
2. இருதரப்பு மற்றும் சார்ந்திருக்கின்ற வாக்குறுதிகள்
3. இருதரப்பு மற்றும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட வேண்டி வாக்குறுதிகள்.

மாணவர் செயல்பாடு:-

மாணவர்கள் பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடிட்டு சொல்லுதல், கலைச்சொற்களை படிக்க சொல்லுதல்.

வலுவூட்டல்:-

- ❖ இது உண்மையான நிறைவேற்றம் கிடையாது. ஆனால் நிறைவேற்றத்திற்கு சமமாகக் கருதப்படும் அது என்ன?-நிறைவேற்றுவதற்கான முனைவு
- ❖ மூன்றாம் நபர் என்று யாரை கூறுகின்றோம்?-முகவர்
- ❖ செல்லத்தக்க நிறைவேற்றம் ஒப்பந்த நபர்கள் தங்களுடைய கடமையை செய்வது, அந்த ஒப்பந்தம்- ஒப்பந்த நிறை வேற்றம்.

மதிப்பீடு:-

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

- வாக்குறுதியின் நிறைவேற்றத்தைக் கோர முடியாத நபர் யார்?.......
- இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள் எத்தனை வகைப்படும்.......

நடுத்தர சிந்தனை வினாக்கள்(MOT):

- ○ சட்டரீதியான பிரதிநிதி என்பவர் யார்?
- ○ முகவர் என்பவர் யார்?
- ○ ஒப்பந்த நிறைவேற்றம் என்றால் என்ன?

குறைதீர் கற்றல்:-

கருத்துகளை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு எளிதில் புரியும் வண்ணம் மற்றும் தேர்வில் விடைகளை தெளிவாக எப்படி எழுத வேண்டும் என்பதை தனிப்பட்ட முறையில் பொதுவாக எடுத்துறைத்தல்.

தொடர் பணி:-

மாணவர்களை அருகில் உள்ள பத்திர பதிவு அலுவலகத்திற்கு அளைத்து சென்று பதிவாளரின் செயல்பாடுகளை பார்வை இடச் செய்தல்.

Downloaded From www.nagaicollege.com

வகுப்பு: 11

பாடம் : வணிகவியல்

தலைப்பு: 31- ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை

தேதி : டிசம்பர் 1வது வாரம்

NAME : வீ.நடராஜன்
அரசு மேல்நிலைப் பள்ளி, **பழையனூர்**
CELL : 96552 39087

கற்றல் நோக்கம்:

- ஒப்பந்தம் விடுவிப்பு பொருள் மற்றும் அதன் வழிகளையும் புரிந்து கொள்ள இயலும்.
- ஒப்பந்த மீறுகை என்பது ஒப்பந்த விடுவிப்பு வழிகளில் ஒன்று என அறிந்து கொள்ள இயலும்.
- ஒப்பந்த மீறுகையினால் பாதிக்கப்பட்ட நபருக்கு கிடைக்கக்கூடிய தீர்வுகளைத் தெரிந்து கொள்ள இயலும்

கற்றல் விளைவுகள்:

- ஒப்பந்த விடுவிப்பு என்பது ஒப்பந்த நபர்களின் உறவு முடிவுக்கு கொண்டுவருவதை குறிக்கும்.
- ஒப்பந்தம் ஒன்றின் மூலம் உருவாக்கப்பட்ட உரிமைகள், கடமைகள் செய்தல் முடியும் போது, ஒப்பந்தம் விடுவிக்கப்படுகின்றது என்பதை மாணவர்கள் புரிந்து கொண்டனர்.
- வீடு கட்டுவதற்கு ஒரு இடம் வளங்கும் போது ஒப்பந்தம் விடுவிப்பு என்ன என்பதை மாணவர்கள் தெரிந்து கொண்டனர்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

PPT, Videos, News paper cutting, Related prospectus, Hi-Tech Lab, Online test link.

முன்னறிவு:

- சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை என்ன?

  -ஒப்பந்தம்
- உடன்படிக்கை என்றால் என்ன?

  -ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும்

ஒவ்வொரு உறுதிமொழியும் உடன்படிக்கையாகும்.

- ஒப்பந்த விடுவிப்பு என்றால் என்ன?

  -ஒப்பந்தம் ஒன்றின் மூலம்

உருவாக்கப்பட்ட உரிமைகள், கடமைகள் செய்தல் முடியும் போது ஒப்பந்தம் விடுவிக்கப்படும்.

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

ஆசிரியர் செயல்பாடு:

பாடஅறிமுகம்:

ஒப்பந்தம் விடுவிக்கப்படும் வழிகள்

1. நிறைவேற்றத்தின் மூலம் விடுவிப்பு:

Downloaded From www.nagaicollege.com

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் தமது கடமைகளைச் செய்தால், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்

நிறைவேற்றம் இரண்டு வகைப்படும்

- உண்மையான நிறைவேற்றம்
- நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்

2. **இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு**

- ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உடன்படிக்கை இருதரப்பு ஒத்துக் கொள்வதன் மூலம் உடன்பாட்டை முடிக்கலாம்.
- ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம்

எ.கா. பரிமாற்றம், திருத்தம், தள்ளுபடி, ரத்துசெய்தல், தளர்த்துதல், இணைப்பு

3. **இயலாது போதலால் விடுவிப்பு:-**

உடன்படிக்கை ஏற்படும்பொழுதே நிறைவேற்ற இயலாமை

I. ஒப்பந்த நபர்களுக்கு தெரிந்து இருக்கலாம்

II. ஒப்பந்த நபர்களுக்கு தெரியாமல் இருக்கலாம்

ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை

- ✓ ஒப்பந்த நபர்களின் கட்டுப்பாட்டிற்கு

அப்பாற்பட்ட சில நிகழ்வுகள்

- ✓ வாக்குறுதி அளித்தவர் அல்லது வாக்குறுதி பெறுபவரின் சில செயல்களால் ஏற்படலாம்.

4. **காலம் கடந்து போவதால் விடுவிப்பு:-**

ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அதனால் பாதிக்கப்பட்ட நபர் குறிப்பிட்ட காலத்தித்றகுள் சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரும் உரிமயை இழந்து விடுகிறார்

5. சட்டத்தினால் விடுவிப்பு-

(i) இறப்பு, (ii) இணைப்பு, (iii) நொடிப்பு

ஒப்பந்த மீறுகையும் அதற்கான தீர்வுகளும்

ஒப்பந்த மீறுகை

- ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் அனைவரும் நம் நமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும்
- ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் தமது கடமைகளைச் செய்ய தவறுதல் ஒப்பந்தம் மீறுகை எனப்படும்.

ஒப்பந்தத்தை மீறுகையினால் பாதிக்கப்பட்ட நபருக்கு பின்வரும் தீர்வுகள் கிடைக்க வாய்ப்புள்ளது

1.ஒப்பந்தத்தை ரத்து செய்தல்

2. திட்டவட்டமான நிறைவேற்றத்திற்கான வழக்கு

3. தடையுத்தரவிற்கான வழக்கு

4. பணிக்கு ஏற்ற தொகைக்கான வழக்கு

Downloaded From www.nagaicollege.com

5. ஏற்பட்ட நட்டத்திற்கான இழப்பீடு

மாணவர் செயல்பாடு:

- மாணவர்கள் பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடிட்டு சொல்லுதல் கலைச் சொற்களை படிக்கச் சொல்லுதல்
- கல்வி T.Vயை பார்க்க சொல்லுதல்
- Chart work செய்தல்.

➢ ஒரு செல்லத்தகு ஒப்பந்த நிறைவேற்றத்தில் ஒப்பந்த நபரின் கடமை
  -ஒப்பந்த விடுவிப்பு செய்யப்பட்டது
➢ செயல்படாத ஒரு ஒப்பந்தம் சட்ட பிரிவு 56 இன் கீழ்
  -தவிற்க்கக்கூடியது
➢ ஒப்பந்த மீறலுக்குக் கொடுக்கப்பட்ட இழப்பீடு-சேதம்

மதிப்பீடு :

எளிய சிந்தனை வினாக்கள் (LOT):

- பல்வேறு சூழ்நிலைகளில் ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாது அந்த ஒப்பந்தம் ---------
- ஒப்பந்த மீறலுக்கு கொடுக்கப்பட்ட இழப்பீடு--------

நடுத்தர சிந்தனை வினா(MOT):

- இருதரப்பு உடன்படிக்கை மூலம் விடுவிப்பின் வகைகள் யாவை?
- பனிக்கு ஏற்ற தொகை என்றால் என்ன?

குறைதீர் கற்றல்:

கருத்துகளை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு எளிதில் புரியும் வண்ணம் மற்றும் தேர்வில் விடைகளை தெளிவாக எப்படி எழுத வேண்டும் என்பதை தனிப்பட்ட முறையில் பொதுவாக எடுத்துறைத்தல்

தொடர்பணி:

மாணவர்களை வீட்டிலுள்ள பட்டா, சிட்டா, அடங்கள். ஒப்பந்த பத்திரங்கள் எங்கு கிடைகிறது. அதை எவ்வாறு வாங்குவது போன்ற நிலைகளை பத்திர அலுவலகத்தில் நேரடியாக பார்க்கச் செய்தல்.

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு: 32. நேர்முகவரிகள்
தேதி : டிசம்பர் 2 வது வாரம்

NAME : P. Ramaraj,
Ghss Odaipatty, Dindigul district
CELL : 98432 61749

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

கற்றல் நோக்கங்கள்:

நேரடி வரிகளின் பொருள் மற்றும் வகைகளை அறிந்து கொள்ளுதல்.

வருமான வரிகளின் சிறப்புக் கூறுகளை புரிந்து கொள்ள இயலும்.

வருமான வரிகளின் அடிப்படைக் கருத்துகளை விளக்க இயலும்.

மொத்த வருமானம் முழு மொத்த வருமானம் பற்றி புரிந்து கொள்ள இயலும்.

கற்றல் விளைவுகள்:

அரசுஎவ்வாறுவரிவசூல்செய்கிறதுஎன்பதைப்புரிந்துகொண்டனர்.

நிரந்தர கணக்கு எண் மற்றும் வரிக்குறியீட்டு எண் போன்றவற்றை தெரிந்து கொண்டனர்.

அரசு வசூலிக்கும் பல்வேறு விதமான வரிகளைத் தெரிந்து கொண்டனர்.

வருமான வரித்துறை பற்றியும் அதன் நிர்வாகக் கட்டமைப்பு பற்றியும் கற்றுக் கொண்டனர்.

பெற்றோர் செலுத்தும் பல்வேறு வரிகளைத் தொரிந்து கொண்டனர்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

வருமானவரி படிவம், தொழில் வரி இரசீது, சரக்கு மற்றும் சேவை வரி இரசீது, வீட்டு வரி இரசீது, சொத்து வரி இரசீது மற்றும் தண்ணீர் வரி இரசீது.

முன்னறிவு:

ஏற்கெனவே 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை சமூக அறிவியல் புத்தகத்தில் படித்த வரி தொடர்பான பாடங்களை நினைவுபடுத்துதல். பெற்றோர்கள் செலுத்தும் பல்வேறு விதமான வரிகளை நினைவு கூறச் செய்தல்.

பாடஅறிமுகம்:

மத்திய அரசும், மாநில அரசும் மேற்கோள்ளும் பல்வேறு விதமான வளர்ச்சி திட்டப் பணிகளுக்கும், நாட்டின் பாதுகாப்பு சார்ந்த துறைகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் ஊதியம் வழங்க மத்திய, மாநிலஅரசுகள் எவ்வாறு நிதி திரட்டுகிறது என்பதைக் கூறி பாட அறிமுகம் செய்யப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு விதமான நலத் திட்ட உதவிகள் வழங்கத் தேவையான நிதியை மாநில அரசு எவ்வாறு திரட்டுகிறது என்பதைக்கூறி பாட அறிமுகம் செய்யப்பட்டது.

பாடவளர்ச்சி / கற்றல் கற்பித்தல் செயல்பாடு / ஆசிரியர் செயல்பாடு:

வரி என்பதன் பொருள்

வரிகளின்வகைகள்: 1. நேர்முகவரிகள் 2. மறைமுகவரிகள்

வருமான வரியின் பொருள் மற்றும் அதன் சிறப்பியல்புகள்

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வருமான வரியின் அடிப்படைக் கருத்துகள்:

1. மதிப்பீட்டிற்குரியவர்,

2. நபர்,

3. மதிப்பீட்டுஆண்டு,

4. முந்தையஆண்டு,

5. வருமானம்,

6. வேளாண்வருமானம்.

வருமானங்களின்தலைப்புகள்

முழுமொத்தவருமானம்மற்றும்மொத்தவருமானம்.

தனிநபர் வருமானத்திற்கானவருமான வரிகணக்கிடுதல்.

மாணவர்செயல்பாடு:

மாணவர்கள் தாங்கள் வசிக்கும் உள்ளாட்சி அமைப்பு அலுவலகத்திற்கு சென்று அங்கு வசூலிக்கப்படும் பல்வேறு வரிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

பெற்றோர்கள் செலுத்தும் பல்வேறு வரிகளைக் கேட்டு எழுதி வரச் சொல்லுதல்.

வலுவூட்டல்:

உள்ளாட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று பல்வேறு வரிகளைத் தெரிந்து கொண்ட மாணவர்களையும், தங்கள் பெற்றோர்கள் செலுத்தும் வரிகளைத் தெரிந்து கொண்ட மாணவர்களையும் அனைத்து மாணவர்கள் முன்பாக பாராட்டுதல்.

Google மற்றும் Youtube video பார்த்து வரி பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்ட மாணவ, மாணவிகளை பாராட்டுதல்.

மதிப்பீடு:

எளிய சிந்தனை வினாக்கள்:

1. அரசால் சுமத்தப்படும் ஒரு கட்டாயக் கட்டணமே ………… ஆகும்.
2. சட்டத்தின் கீழ் யாரால் வருமானவரி செலுத்தப்படத்தக்கதாக உள்ளதோ அந்நபர் ………….. ஆவார்.
3. ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் ……… ஆண்டில் வரி விதிப்பிற்குட்படும்.
4. …………… வருமானம் முழுவதும் வருமானவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நடுத்தர சிந்தனை வினாக்கள்:

1. வருமான வரி என்றால் என்ன?
2. சரக்கு மற்றும் சேவைவரி என்றால் என்ன?
3. மதிப்பீட்டிற்குறியவர் என்பவர் யார்?
4. மொத்த வருமானம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

Downloaded From www.nagaicollege.com

உயர் சிந்தனை வினாக்கள்:

1. வருமான வரியின் அடிப்படைக் கருத்துகள் யாவை?
2. ஐந்து வகையான வருமானத் தலைப்புள் யாவை?

குறைதீர்கற்றல்:

பாடக் கருத்துக்களை புரிந்து கொள்வதில் பின் தங்கியுள்ள மாணவ, மாணவிகளை அடையாளம் கண்டு மேற்கண்ட பாடக்கருத்துகளை சுருக்கமாக திரும்பக் கற்பித்தல்.

செயல்பாடு:

வரி தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சேகரித்தல்.

தொடர்பணி :

அனைத்து மாணவ, மாணவிகளின் துணையோடு நாளிதழ்களில் வெளிவரும் நேர்முகவரி தொடர்பான செய்திகளை சேகரித்து அவ்வப்போது மாணவர்களுக்கு வழங்குதல்

வகுப்பு: 11
பாடம் : வணிகவியல்
தலைப்பு: 33. மறைமுகவரிகள்
தேதி : டிசம்பர் 3 வது வாரம்

NAME : P. Ramaraj,
Ghss Odaipatty, Dindigul district
CELL : 98432 61749

கற்றல்நோக்கங்கள்:

மறைமுக வரியின் பொருளை புரிந்து கொள்ள இயலும். நேரடிவரி மற்றும் மறை முகவரிக்கு இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ள இயலும்.
சரக்கு மற்றும் சேவை வரியின் பொருள் வகைகள் மற்றும் நோக்கங்களை அறிந்து கொள்ள இயலும். சரக்கு மற்றும் சேவைவரி குழுமம் மற்றும் அதனுடைய பணிகளைப் பற்றி கற்றுணர இயலும்.

கற்றல்விளைவுகள்:

சரக்கு மற்றும் சேவைவரி பற்றியும் அதன் வகைகளைப் பற்றியும் தெரிந்து கொண்டனர். பல்வேறு விதமான சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறைகளையும் என்னென்ன பொருட்களுக்கு எவ்வளவு வரி விதிப்பு செய்யப்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டனர்.
பெற்றோர் செலுத்தும் பல்வேறு வரிகளைத் தொரிந்து கொண்டனர்.

கற்றல்கற்பித்தல்உபகரணங்கள்:

Downloaded From www.nagaicollege.com

வருமானவரி படிவம், தொழில் வரி இரசீது, சரக்கு மற்றும் சேவை வரி இரசீது, வீட்டு வரி இரசீது, சொத்து வரி இரசீது மற்றும் தண்ணீர் வரி இரசீது.

முன்னறிவு:

ஏற்கெனவே 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை சமூக அறிவியல் புத்தகத்தில் படித்த வரி தொடர்பான பாடங்களை நினைவுபடுத்துதல்.

முந்தைய பாடத்தில் படித்த நேர்முகவரி தொடர்பான விவரங்களை நினைவு கூறுதல்.

பாடஅறிமுகம்:

மத்திய அரசும், மாநில அரசும் மேற்கோள்ளும் பல்வேறு விதமான வளர்ச்சி திட்டப் பணிகளுக்கும், நாட்டின் பாதுகாப்பு சார்ந்த துறைகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் ஊதியம் வழங்க மத்திய, மாநில அரசுகள் எவ்வாறு நிதி திரட்டுகிறது என்பதைக் கூறி பாட அறிமுகம் செய்யப்பட்டது.

மத்திய மாநில அரசுகள் வழங்கும் பல்வேறு விதமான நலத் திட்ட உதவிகளுக்குத் தேவையான நிதியை மத்திய மாநில அரசுகள் எவ்வாறு திரட்டுகிறது என்பதைக்கூறி பாட அறிமுகம் செய்யப்பட்டது.

பாடவளர்ச்சி / கற்றல் கற்பித்தல் செயல்பாடு / ஆசிரியர் செயல்பாடு:

மறைமுகவரி என்பதன் பொருள்.

நேர்முகவரி மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான வேறுபாடுகள்

சரக்கு மற்றும் சேவை வரியின் பொருள் மற்றும் வகைகள்.

சரக்கு மற்றும் சேவை வரிகளின் குழுமம்.

சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள்

சரக்கு மற்றும் சேவை வரியின் பயன்கள்:

1. சமூகம் மற்றும் நாட்டிற்கு, 2. வியாபார சமூகத்திற்கு, 3. நுகர்வோருக்கு. சரக்கு மற்றும் சேவை வரியின் குறைகள்.

மாணவர்செயல்பாடு:

மாணவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கடைகளுக்குச் சென்று சரக்கு மற்றும் சேவைவரி பற்றி தெரிந்து கொள்ளுதல்.

பொருட்கள் வாங்கும் போது செலுத்தப்படும் பல்வேறு விதமான சரக்கு மற்றும் சேவை வரிகளை வரிசைப்படுத்துதல்.

வலுவூட்டல்:

Downloaded From www.nagaicollege.com

தங்கள் பகுதியில் உள்ள கடைகளுக்குச் சென்று சரக்கு மற்றும் சேவைவரி பற்றி தெரிந்து கொண்ட மாணவர்களை அனைத்து மாணவர்கள் முன்பாக பாராட்டுதல்.

Google மற்றும் Youtube video பார்த்து சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான விவரங்களைத் தெரிந்து கொண்ட மாணவ, மாணவிகளை பாராட்டுதல்.

மதிப்பீடு:

எளியசிந்தனைவினாக்கள்:

1. வரிக்குரியவர் வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலுமானால் அதுவே …… என அழைக்கப்படுகிறது.
2. சரக்கு மற்றும் சேவை வரி ……… க்கு உதாரணம் ஆகும்.
3. சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் ………… ல் இயற்றப்பட்டது.
4. தற்போதைய சரக்கு மற்றும் சேவைவரி குழுமத்தின் தலைவர் யார்?

நடுத்தரசிந்தனைவினாக்கள்:

1. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?
2. நான்கு விதமான சரக்கு மற்றும் சேவை வரி வீதங்கள் யாவை?

உயர்சிந்தனைவினாக்கள்:

1. நேர்முக வரியையும், மறை முக வரியையும் வேறுபடுத்துக.
2. சரக்கு மற்றும் சேவை வரியின் பயன்கள்என்ன?

குறைதீர்கற்றல்:

பாடக் கருத்துக்களை புரிந்து கொள்வதில் பின்தங்கியுள்ள மாணவ, மாணவிகளை அடையாளம் கண்டு மேற்கண்ட பாடக் கருத்துகளை சுருக்கமாக திரும்பக் கற்பித்தல்.

செயல்பாடு:

மறைமுகவரி தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சேகரித்தல்.

தொடர்பணி :

அனைத்து மாணவ, மாணவிகளின் துணையோடு நாளிதழ்களில் வெளிவரும் சரக்கு மற்றும் சேவைவரி தொடர்பான செய்திகளை சேகரித்து அவ்வப்போது மாணவர்களுக்கு வழங்குதல்.

Downloaded From www.nagaicollege.com